This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



சுராவின்

# தமிழ் உரைநூல்

## மேல்நிலை - முதலாம் ஆண்டு



### சிறப்பம்சங்கள்

- புதிதாக திருத்தியமைக்கப்பட்ட பாடநூலின்படி தயாரிக்கப்பட்டுள்ளது.
- புதிய பாடதிட்டத்தின்படி, பாடப்பகுதிகளிலுள்ள அனைத்து வினாக்களுக்கும் எளிமையான விடைகள் கொடுக்கப்பட்டுள்ளன.
- மதிப்பீடு, மொழியை ஆள்வோம், மொழியோடு விளையாடு, கற்பவை கற்றபின், இலக்கணம். கூடுதலாக புணர்ச்சி விதிகளின் விளக்கங்கள், இலக்கணக் குறிப்பு, கூடுதல் வினா விடைகள். மொழித்திறன் பயிற்சிகள் ஆகியவை தரப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2018 (அ.மா.வி.), முதல் பருவ இடைத்தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2018 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- காலாண்டுத் தேர்வு 2019, அரையாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020 வினாக்கள் ஆங்காங்கே சுட்டிக்காட்டப்பட்டுள்ளன.
- அரசு மாதிரி வினாத்தாள் 2018, காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019 – வினாத்தாள்கள் இணைக்கப்பட்டுள்ளன.
- மார்ச் 2020 அரசு பொதுத்தேர்வு வினாத்தாள் – விடைகளுடன் இணைக்கப்பட்டுள்ளது.



சுரா பப்ளிகேஷன்ஸ்
சென்னை

orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2021-22 பதிப்பு**
© வெளியீட்டாளர்கள்
ISBN : **978-81-8449-979-7**
**குறியீட்டு எண் : SG 145**

**எழுதி வழங்கியவர்கள்**
**கி. லதா,** M.A., B.Ed., M.Phil.,
**கவிஞர். மாத்தூர். அ.ச.சேகர்,** M.A., B.Ed.,

**தலைமை அலுவலகம்:**
1620, 'ஜே' பிளாக், 16-ஆவது பிரதான சாலை,
அண்ணா நகர், சென்னை-600 040.
☎ 91-44-4862 9977, 486 27755
✆96001 75757 / 81242 01000 / 81243 01000,
வாட்ஸ்அப்: 8124201000
**e-mail :** orders@surabooks.com,
**website :** www.surabooks.com

மேலும் விவரங்களுக்கு / தொடர்புக்கு
புத்தகத்தில் உள்ள சந்தேகங்களுக்கு : enquiry@surabooks.com
புத்தகங்கள் வாங்க : orders@surabooks.com
தொடர்புக்கு : 96001 75757 / 8124301000
வாட்ஸ்அப் : 8124201000 / 9840926027
**ஆன்லைன் வலைதளம்** : www.surabooks.com
பாடக் குறிப்புகளின் தொகுக்கப்பட்ட பகுதிகளை எமது http://tnkalvi.in இணையதளத்திலிருந்து இலவசமாக பதிவிறக்கிக்கொள்ளலாம்

## Also available for Std. - XII

**Guides :**
- Sura's English
- Sura's Mathematics (EM / TM)
- Sura's Physics (EM)
- Sura's Chemistry (EM / TM)
- Sura's Biology (EM / TM)
- Sura's Economics (EM / TM)
- Sura's Commerce (EM / TM)
- Sura's Accountancy (EM / TM)
- Sura's Business Mathematics (EM)
- Sura's Computer Science (EM / TM)

**Question Banks :**
- சுராவின் தமிழ்
- Sura's English
- Sura's Mathematics (EM / TM)
- Sura's Physics (EM / TM)
- Sura's Chemistry (EM / TM)
- Sura's Biology (EM / TM)
- Sura's Computer Science (EM / TM)
- Sura's Economics (EM / TM)
- Sura's Commerce (EM / TM)
- Sura's Accountancy (EM / TM)





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000


This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# பொருளடக்கம்


| இயல் | பொருண்மை | பாடத் தலைப்புகள் | பக்க எண் | மாதம் |
|---|---|---|---|---|
| | | மனப்பாடச் செய்யுள் | 1-4 | ஜூன் |
| 1. | மொழி<br>**என்னுயிர் என்பேன்** | யுகத்தின் பாடல் **(செய்யுள்)** | 5-32 | ஜூன் |
| | | பேச்சுமொழியும் கவிதை மொழியும் **(உரைநடை)** | | |
| | | நன்னூல் பாயிரம் **(செய்யுள்)** | | |
| | | ஆறாம் திணை **(துணைப்பாடம்)** | | |
| | | மொழி முதல், இறுதி எழுத்துகள் **(இலக்கணம்)** | | |
| 2. | இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்<br>**மாமழை போற்றுதும்** | இயற்கை வேளாண்மை **(உரைநடை)** | 33-66 | ஜூன் |
| | | ஏதிலிக்குருவிகள் **(செய்யுள்)** | | |
| | | காவியம் **(செய்யுள்)** | | |
| | | திருமலை முருகன் பள்ளு **(செய்யுள்)** | | |
| | | ஐங்குறுநூறு **(செய்யுள்)** | | |
| | | யானை டாக்டர் **(துணைப்பாடம்)** | | |
| | | புணர்ச்சி விதிகள் **(இலக்கணம்)** | | |
| 3. | பண்பாடு<br>**பீடு பெற நில்** | மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு **(உரைநடை)** | 67-114 | ஜூலை |
| | | காவடிச்சிந்து **(செய்யுள்)** | | |
| | | குறுந்தொகை **(செய்யுள்)** | | |
| | | புறநானூறு **(செய்யுள்)** | | |
| | | வாடிவாசல் **(துணைப்பாடம்)** | | |
| | | பகுபத உறுப்புகள் **(இலக்கணம்)** | | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 4. | கல்வி<br>**கேடில் விழுச்செல்வம்** | தமிழகக் கல்வி வரலாறு **(உரைநடை)** | 115-144 | ஆகஸ்ட் |
| | | பிள்ளைக்கூடம் **(செய்யுள்)** | | |
| | | நற்றிணை **(செய்யுள்)** | | |
| | | தொல்காப்பியம் **(செய்யுள்)**<br>சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் | | |
| | | இதழாளர் பாரதி **(துணைப்பாடம்)** | | |
| | | படைப்பாக்க உத்திகள் **(இலக்கணம்)** | | |


www.surabooks.com






orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores




| | | | | |
|---|---|---|---|---|
| 5. | நாகரிகம், தொழில், வணிகம் **நாளெல்லாம் வினைசெய்** | ஆனந்தரங்கர் நாட்குறிப்பு **(உரைநடை)** | 145-186 | **ஆகஸ்ட்** |
| | | சீறாப்புராணம் **(செய்யுள்)** | | |
| | | அகநானூறு **(செய்யுள்)** | | |
| | | பிம்பம் **(துணைப்பாடம்)** | | |
| | | பா இயற்றப் பழகலாம் **(இலக்கணம்)** | | |
| | | திருக்குறள் **(வாழ்வியல்)** | | |
| 6. | கலை, அழகியல், புதுமைகள் **பல்கலை நிறுவு** | காலத்தை வென்ற கலை **(உரைநடை)** | 187-218 | **அக்டோபர்** |
| | | ஆத்மாநாம் கவிதைகள் **(செய்யுள்)** | | |
| | | குற்றாலக் குறவஞ்சி **(செய்யுள்)** | | |
| | | திருச்சாழல் **(செய்யுள்)** | | |
| | | இசைத்தமிழர் இருவர் **(துணைப்பாடம்)** | | |
| | | கலைச்சொல்லாக்கம் **(இலக்கணம்)** | | |
| 7. | நாடு, சமூகம், அரசு, நிருவாகம் **வையத் தலைமை கொள்** | காற்றில் கலந்த பேரோசை **(உரைநடை)** | 219-250 | **நவம்பர்** |
| | | புரட்சிக்கவி **(செய்யுள்)** | | |
| | | பதிற்றுப்பத்து **(செய்யுள்)** | | |
| | | சிந்தனைப் பட்டிமன்றம் **(துணைப்பாடம்)** | | |
| | | ஆக்கப்பெயர்கள் **(இலக்கணம்)** | | |
| 8. | மனிதம், ஆளுமை **யாரையும் மதித்து வாழ்** | தாகூரின் கடிதங்கள் **(உரைநடை)** | 251-286 | **டிசம்பர்** |
| | | ஒவ்வொரு புல்லையும் **(செய்யுள்)** | | |
| | | தொலைந்து போனவர்கள் **(செய்யுள்)** | | |
| | | மனோன்மணீயம் **(செய்யுள்)** | | |
| | | செவ்வி **(துணைப்பாடம்)** | | |
| | | மெய்ப்புத் திருத்தக் குறியீடுகள் **(இலக்கணம்)** | | |
| **மொழித்திறன் பயிற்சிகள்** வாக்கியப் பிழைகளைத் திருத்தி எழுதுதல், மரபுப் பிழையை நீக்கி எழுதுதல், பொருத்தமான நிறுத்தற்குறிகளை இடுதல், விடைக்கேற்ற வினா அமைக்கவும், ஆங்கிலச் சொல்லை நீக்கி தமிழில் எழுதுதல், கவிதைகள், இலக்கிய நயம் பாராட்டல், பழமொழியும் வாழ்க்கை நிகழ்வும், பழமொழி - மொழிபெயர்ப்பு, மொழியாக்கம். | | | 287-310 | |
| அரசு மாதிரி வினாத்தாள் 2018, காலாண்டு, அரையாண்டுத் தேர்வு -2019 வினாத்தாள்கள் | | | 311-322 | |
| பொதுத்தேர்வு மார்ச் வினாத்தாள் 2020 - விடைகளுடன் | | | 323-330 | |


www.surabooks.com





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

# மனப்பாடச் செய்யுள்

## இயல் – 1

### யுகத்தின் பாடல்

ஏடு தொடக்கி வைத்து என்னம்மை அ.மா.வி 2018
மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த
காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019
விரல்முனையைத் தீயிலே தோய்த்து
திசைகளின் சுவரெலாம்
எழுதத்தான் வேண்டும்
எழுகின்ற யுகத்தினோர் பாடலை.

– சு.வில்வரத்தினம்

### நன்னூல் – பாயிரம்

ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே
கேட்போர் பயனோடு ஆய்எண் பொருளும்
வாய்ப்பக் காட்டல் பாயிரத்து இயல்பே.

காலம் களனே காரணம் என்றுஇம்
மூவகை ஏற்றி மொழிநரும் உளரே.

பாவகை : நூற்பா – பவணந்தி முனிவர்

## இயல் – 2

### காவியம்

சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது.

– பிரமிள்

## இயல் – 3

### குறுந்தொகை

மு.ப.இடைத்தேர்வு, காலாண்டுத் தேர்வு 2018

அம்ம வாழி தோழி நம்மூர்ப்
பிரிந்தோர்ப் புணர்ப்போர் இருந்தனர் கொல்லோ
தண்டுடைக் கையர் வெண்டலைச் சிதவலர்
நன்றுநன் றென்னும் மாக்களோடு
இன்றுபெரிது என்னும் ஆங்கண தவையே.

– வெள்ளி வீதியார்

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

## இயல் – 3

### புறநானூறு

உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்
அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!
துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்
புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினும் கொள்ளலர் ; அயர்விலர்;
அன்ன மாட்சி அனையர் ஆகித்
தமக்கென முயலா நோன்தாள்
பிறர்க்கென முயலுநர் உண்மை யானே.

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

பாவகை : நேரிசை ஆசிரியப்பா

## இயல் – 3

### திருக்குறள்

**அடக்கமுடைமை**

1. நிலையின் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது.

2. யாகாவார் ஆயினும் நாகாக்க காவாக்கால்
சோகாப்பர் சொல்லிழுக்குப் பட்டு.

3. தீயினால் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே
நாவினால் சுட்ட வடு. காலாண்டுத் தேர்வு 2019

**ஒப்புரவறிதல்**

4. தாளாற்றித் தந்த பொருளெல்லாம் தக்கார்க்கு
வேளாண்மை செய்தல் பொருட்டு.
அரையாண்டுத் தேர்வு 2019

6. மருந்தாகித் தப்பா மரத்தற்றால் செல்வம்
பெருந்தகை யான்கண் படின்.
மு.ப.இடைத்தேர்வு 2018

**நிலையாமை**

13. நெருநல் உளனொருவன் இன்றில்லை என்னும்
பெருமை உடைத்துஇவ் வுலகு.

**புகழ்**

8. தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று.
காலாண்டுத் தேர்வு 2018

9. வசையொழிய வாழ்வாரே வாழ்வார் இசையொழிய
வாழ்வாரே வாழா தவர்.

**துறவு**

15. யாதனின் யாதனின் நீங்கியான் நோதல்
அதனின் அதனின் இலன்.

16. பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு.

**வலியறிதல்**

19. வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல். அ.மா.வி 2018



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி

# யுகத்தின் பாடல்

- சு.வில்வரத்தினம் கவிதைப்பேழை

| பாடல் | பொருளுரை |
|---|---|
| 1. என் அம்மை, ஒற்றியெடுத்த<br>நெற்றிமண் அழகே!<br>வழிவழி நினதடி தொழுதவர்,<br>உழுதவர், விதைத்தவர்,<br>வியர்த்தவர்க்கெல்லாம்<br>நிறைமணி தந்தவளே!<br>உனக்குப்<br>பல்லாண்டு<br>பல்லாண்டு<br>பல்லாயிரத்தாண்டு | என் அன்னை பூமித்தாய். பூமித் தாயின் நெற்றி மண் அழகு. பூமித்தாயின் திருவடிகளைக் காலம் காலமாக தொழுகின்றனர். தொழுது வருகின்றனர்.<br>உழுதவர், விதைத்தவர், வியர்த்தவர் எல்லாருக்கும் நிறைந்த பொருள்களை அள்ளித் தந்தவள் நம் பூமித்தாய்.<br>அவளுக்குப் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நாம் பல்லாண்டு பாட வேண்டும்.<br>அது போல நம் தமிழ்த்தாய் சங்ககாலம் தொடங்கி இக்காலம் வரை நமக்கு ஏற்பட்ட இடர்களைக் களைந்து உயர் தனிச் செம்மொழியாய்ச் செழித்தோங்கி இருக்கின்றாள். |
| 2. பாடத்தான் வேண்டும்!<br>காற்றிலேறிக்<br>கனைகடலை, நெருப்பாற்றை,<br>மலைமுகடுகளைக் கடந்து<br>செல் எனச் செல்லுமோர் பாடலை<br>கபாடபுரங்களைக் காவுகொண்ட பின்னும்<br>காலத்தால் சாகாத தொல் கனிமங்களின்<br>உரமெலாம் சேரப்<br>பாடத்தான் வேண்டும்! | பாடத்தான் வேண்டும்! காற்றில் ஏறி, கனைகடலை, நெருப்பாற்றை மலை முகடுகளைக் கடந்து செல் எனச் செல்லும் ஓர் பாடலை நாம் பாடத்தான் வேண்டும்.<br>கடல் சீற்றத்தால் கபாடபுரங்களை இம் மண் இழந்த போதும் காலத்தால் என்றும் அழியாத தொல் கனிமங்களின் உரமெலாம் சேரப் பாடத்தான் வேண்டும். |
| ஏடு தொடக்கி வைத்து என்னம்மை<br>மண்ணிலே தீட்டித்தீட்டி எழுதுவித்த<br>விரல்முனையைத் தீயிலே தோய்த்து<br>திசைகளின் சுவரெலாம்<br>எழுதத்தான் வேண்டும்<br>எழுகின்ற யுகத்தினோர் பாடலை.<br>- சு.வில்வரத்தினம் | ஏடு தொடக்கி வைத்து என் தாய் மண்ணிலே தீட்டித் தீட்டி எழுதுவித்த விரல் முனையைத் தீயிலே தோய்த்து எண் திசைகளின் சுவரெல்லாம் எழுதத்தான் வேண்டும் எழுகின்ற யுகத்தினோர் பாடலை.<br>என் தாய் மண்ணின் பெருமையை எல்லாத் திசைகளிலும் பரவச் செய்ய நாம் தாய் மண்ணின் புகழைப் பல்லாண்டு வாழ்த்துப்பாட வேண்டும். |

**புதுக்கவிதை என்பதன் விளக்கம்:**

- மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனத்தில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.
- இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

**நூற்குறிப்பு :**

வில்வரத்தினத்தின் இரண்டு கவிதைகளிலிருந்து தேர்ந்தெடுத்த பகுதிகள் பாடப் பகுதியில் இடம் பெறுகின்றன.

**ஆசிரியர் குறிப்பு :**

- கவிஞர் சு. வில்ரத்தினம் யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத்தீவில் பிறந்தவர்.
- இவருடைய கவிதைகள் மொத்தமாக 'உயிர்த்தெழும் காலத்துக்காக' எனும் தலைப்பில் 2001இல் தொகுக்கப்பட்டன.
- இவர் கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர்.



orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



## கூடுதல் வினாக்கள்

### பலவுள் தெரிக.

1. விதைத்தவர் என்பதன் இலக்கணக்குறிப்பு — காலாண்டுத் தேர்வு 2019

அ) உரிச்சொல் ஆ) வினையாலணையும் பெயர்
இ) வினையெச்சம் ஈ) தொழிற்பெயர்

**விடை: ஆ) வினையாலணையும் பெயர்**

### குறுவினா

1. **புதுக்கவிதை – விளக்கம் தருக.**

(i) மரபு சார்ந்த செய்யுள்களின் கட்டுப்பாடுகளில் இருந்து தன்னை விடுவித்துக் கொண்ட கவிதைகளைப் புதுக்கவிதைகள் என்பர். படிப்போரின் ஆழ்மனத்தில் புதுக்கவிதை ஏற்படுத்தும் தாக்கமே முதன்மையானது.

(ii) இது படிப்போரின் சிந்தனைக்கு ஏற்ப விரிவடையும் பன்முகத்தன்மை கொண்டது. எளியவர்களும் தம் உணர்ச்சிகளைக் கவிதை வாயிலாக வெளிப்படுத்தும் வாய்ப்பைத் தந்தது புதுக்கவிதை எனலாம்.

### சிறுவினா

1. **கவிஞர் சு.வில்வரத்தினம் – குறிப்பு எழுதுக.**

(i) சு.வி. என்ற பெயரால் அறியப்படும் கவிஞர் சு. வில்வரத்தினம் 1950 ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள புங்குடுத் தீவில் பிறந்தவர்.

(ii) இவருடைய கவிதைகள் மொத்தமாக ‘உயிர்த்தெழும் காலத்துக்காக’ என்ற தலைப்பில் 2001 இல் வெளியானது. கவிதைகள் இயற்றுவதுடன் சிறப்பாகப் பாடும் திறனும் கொண்டவர். தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்டத்தில் உறுதியான பற்றுக் கொண்டவர். தனது கவிதைகளில் அதற்கே முதன்மை இடத்தை வழங்கி வந்தார்.

(iii) தமிழீழ விடுதலைப் போராட்டத்திற்கு வழங்கிய பங்களிப்பிற்காக தமிழீழ விடுதலைப் புலிகளால் ‘நாட்டுப்பற்றாளர் விருது’ வழங்கி சிறப்பிக்கப்பட்டார். **அகங்களும் முகங்களும், காற்று வெளிக் கிராமம், காலத்துயர், நெற்றி மண், உயிர்த்தெழும் காலத்துக்காக, வாசிகம்** ஆகிய கவிதைத் தொகுதி நூல்களை இயற்றியுள்ளார். சு.வில்வரத்தினம் அவர்கள் 9.12.2006 இல் கொழும்பில் இயற்கை எய்தினார்.

☆☆☆

இயல் 1 — என்னுயிர் என்பேன் – மொழி

# பேச்சுமொழியும் கவிதை மொழியும்

- இந்திரன் — உரைநடை உலகம்

### ஆசிரியர் குறிப்பு :

இராசேந்திரன் என்னும் இயற்பெயர் கொண்ட இந்திரன் சிறந்த கலைவிமர்சகர். கவிஞர், மொழிபெயர்ப்பாளர். ஓவியர் எனப் பன்முகத்தன்மை கொண்டவர். ஒரிய மொழிக் கவிஞர் மனோரமா பிஸ்வாலின் **“பறவைகள் ஒருவேளை தூங்கப் போயிருக்கலாம்”** என்னும் நூலின் மொழிபெயர்ப்பு நூலுக்காக, 2011 ஆம் ஆண்டுக்கான **சாகித்திய அகாதெமியின் விருது** பெற்றுள்ளார். **முப்பட்டை நகரம், சாம்பல் வார்த்தைகள்** உள்ளிட்ட கவிதை நூல்களையும் **தமிழ் அழகியல், நவீன ஓவியம்** உள்ளிட்ட கட்டுரை நூல்களையும் படைத்துள்ளார். **வெளிச்சம் நுண்கலை** ஆகிய இதழ்களை நடத்தியுள்ளார்.

### பாடப்பகுதிக்கான கவிதை மொழிபெயர்ப்புகள் :

- வால்ட்விட்மன் – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : சங்கர் ஜெயராமன்
- மல்லார்மே – பிரெஞ்சு மொழியிலிருந்து தமிழில் : வெ.ஸ்ரீராம்
- பாப்லோ நெரூடா – ஆங்கிலத்திலிருந்து தமிழில் : ஆ.இரா. வேங்கடாசலபதி





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



கவிதைகள் இறுக்கிச் சுற்றப்பட்ட கம்பிச் சுருளைப் போல் அல்லாமல் பேச்சுமொழிக்கேற்றாற் போல் தளர்வோடு இருக்கும். பல நேரங்களில் கவிதை என்பது நடனமாடிக் கொண்டிருப்பவன் அவ்வப்போது நடப்பதற்குத் தாவி வருவது போல வெறுமனே ஒரு பேச்சு என்ற நிலைக்கு நழுவி விடும்.

**இரண்டாம் வகையினர்:**

கவிஞர் 'மல்லார்மே' போன்றவர்கள் இவர்களுடைய கவிதைகளில் பேச்சு என்பது மூடிய நிலையில் செயல்படுகின்றது. எதிரில் ஒருவரை வைத்துக் கொண்டு பேசுவதைப்போல் இல்லாமல் தனிமையில் தங்களுக்குத் தாங்களே பேசிக் கொள்வதைப் போல் இருக்கும். தனிப்பட்ட ஒவ்வொரு சொல்லும் பிறிதொன்றைப் பேசுவதோடு மட்டுமல்லாமல் தன்னையே பேசிக் கொள்வதாகும். இவர்களின் கவிதைகளைக் குறியீட்டுக் கவிதைகள் என்று கூறலாம்.

**மூன்றாம் வகையினர்:**

ஸ்பானிஷ் மொழிக் கவிஞராகிய 'பாப்லோ நெரூடா' போன்றவர்கள் கவிதை ஒரு குறிப்பிட்ட பொருளைப் பற்றியது என்று தோன்றினாலும் அஃது அப்பொருளைப் பற்றியது அன்று. இவர்களது கவிதை வாழ்க்கையின் வடிவமற்ற தன்மையைப் பற்றிப் பேசுகிறதே தவிர வாழ்க்கை வடிவத்தை வெற்றி கொள்வது இல்லை. இதுபோன்ற கவிதை, எந்தவித முன்கூட்டிய திட்டமோ, ஒழுங்கமைதியோ இன்றி ஒன்றைச் சுட்டுவதுபோலத் தோன்றினாலும் எதையும் சுட்டாமல் முடிந்து விடுவதைப் போன்றதாக உள்ளது.

**2. என்னை விளக்கிய மொழி என்று ஆசிரியர் இந்திரன் உணர்த்தும் செய்திகள் யாவை?**

(i) மொழி என்ற ஒன்று என்னுள் தோன்றியவுடன்தான் உலகம் எனது கவனிப்புக்குரிய ஒன்றாக மாறியது. எனது உலகத்தை இழைஇழையாகப் பிரித்தும் வகுத்தும் தொகுத்தும் விதவிதமான தூரங்களில் வைத்துக் கொடுத்தது மொழி. இதன் மூலமாக எனக்குள் உலகத்தின் பல கதவுகள் திறக்கலாயின.

(ii) மொழியின் சாவியைப் போட்டுத் திறக்கிற போதெல்லாம் இதுவரையிலும் பெயர் சூட்டப்பட்டிராத பலவற்றை நானே என் கண்களால் கண்டுபிடிக்கத் தொடங்கினேன். அவற்றிற்கு நானே எனக்குப் பிடித்தமான பெயர்களைச் சூட்டத் தொடங்கினேன்.

(iii) பெயர்களுக்குக் கடந்தகாலம், நிகழ்காலம், எதிர்காலம் ஆகிய வண்ணங்களைப் பூசும் சக்தியை மொழி எனக்குக் கொடுத்தது. அவற்றை விதவிதமான அடுக்குகளில் ஒருமையாகவும் பன்மையாகவும் அவற்றின் முக்கியத்துவத்திற்கு ஏற்ப அடுக்கும் திறனை மொழி எனக்கு வழங்கியது.

(iv) மொழிவழியாக ஒன்றைப் பெயரிட்டு அழைக்கத் தொடங்கியவுடன் அந்தப் பொருளின்மீது எனக்கொரு அதிகாரம் வந்துவிடுவதை உணர்கிறேன். என்னுடைய மொழி, பெயர்கள் இட்டு அழைத்தவுடன் அவற்றின் மீது ஒரு அதிகாரத்தை உருவாக்கிக் கொடுத்ததை உணரத் தலைப்பட்டேன்.

(v) ஒரு திரவ நிலையில், நான் விரும்பும் வகையில் என்னிடம் கீழ்ப்படிந்து நடந்துகொள்ளும் எனது மொழி, எழுத்து மொழியாகப் பதிவு செய்யப்படுகிறபோது உறைந்து போன பனிக்கட்டியைப் போன்ற திட நிலையை அடைந்து விடுகிறது. இந்தத் திட நிலையை அடைந்தமொழி அது அச்சிடப்பட்ட ஒரு கவிதையாக மாறுகிறபோது என்னிலிருந்து பிரிந்து போய்விட்ட ஒரு பொருளாக மாறிவிடுகிறது.

☆☆☆

இயல் 1 — என்னுயிர் என்பேன் - மொழி

# நன்னூல் - பாயிரம்

- பவணந்தி முனிவர் — கவிதைப்பேழை

**பாடல்**

1. முகவுரை பதிகம் அணிந்துரை நூன்முகம்
புறவுரை தந்துரை புனைந்துரை பாயிரம். — நூ. எண். 1

2. பாயிரம் பொது, சிறப்பு எனஇரு பாற்றே — நூ. எண். 2

3. நூலே நுவல்வோன் நுவலும் திறனே
கொள்வோன் கோடல் கூற்றாம் ஐந்தும்
எல்லா நூற்கும் இவைபொதுப் பாயிரம். — நூ. எண். 3

4. ஆக்கியோன் பெயரே வழியே எல்லை
நூற்பெயர் யாப்பே நுதலிய பொருளே





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 1

என்னுயிர் என்பேன் - மொழி

# ஆறாம் திணை

- அ. முத்துலிங்கம் விரிவானம்

**ஆசிரியர் குறிப்பு :**

எழுத்தாளர் அ.முத்துலிங்கம், இலங்கையிலுள்ள யாழ்பாணத்துக்கு அருகிலுள்ள கொக்குவில் கிராமத்தில் பிறந்தவர். பணி தொடர்பாகப் பல நாடுகளுக்குப் பயணித்திருக்கும் இவர் தற்போது கனடாவில் வசித்து வருகிறார். **அக்கா, மகாராஜாவின் ரயில்வண்டி, திகடச்சக்கரம்** உள்ளிட்ட பல சிறுகதைத் தொகுப்புகளை வெளியிட்டிருக்கின்றார். **வம்சவிருத்தி** என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1996ஆம் ஆண்டு தமிழ்நாடு அரசின் முதல் பரிசினைப் பெற்றவர். **வடக்கு வீதி** என்னும் சிறுகதைத் தொகுப்புக்காக 1999இல் இலங்கை அரசின் சாகித்தியப் பரிசையும் பெற்றிருக்கின்றார்.

## நம்மை அளப்போம்

### நெடுவினா

**1. தமிழர் வாழ்வோடும் புலம்பெயர் நிகழ்வுகளோடும் அ.முத்துலிங்கத்தின் திணைப்பாகுபாடு எவ்வாறு இணைக்கப்படுகிறது?** காலாண்டுத் தேர்வு 2018

**சங்க இலக்கியம் கூறிய புலம்பெயர் நிகழ்வு:**

(i) தமிழர்கள் வேலைவாய்ப்பு, வறுமை போன்ற காரணங்களினால் இடம் விட்டு இடம் செல்கின்றனர். இவ்வாறு புலம்பெயர்வது ஒன்றும் புதிதல்ல. ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக மனிதன் புலம் பெயர்ந்தபடியே இருக்கிறான்.

(ii) சங்க இலக்கியம் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐந்து நிலங்கள் பற்றிப் பேசும் பல பாடல்கள் தலைவன், தலைவி பிரிந்து போவதைச் சொல்லும் பொருள் தேடப் போவதால் புலம்பெயர நேரிடுகிறது.

(iii) நற்றிணை 153ஆவது பாடலில் **தனிமகனார்**, சினம் கொண்ட அரசனின் கொடுமை தாங்க முடியாமல் துயருற்று, சொந்த ஊரைவிட்டு ஓடியவர்களின் கதையை,

‘வெஞ்சின வேந்தன் பகை அலைக்கலங்கி,
வாழ்வோர் போகிய பேர் ஊர்ப் பாழ்’ என்கிறார்.

(iv) 2000 வருடங்களுக்கு முன்னர் அரசரின் கொலைச் சீற்றத்திற்குப் பயந்து வெளியேறியவர்கள் போலத்தான் சமீப காலங்களில் புகலிடம் தேடி அலைந்து கரை சேர்ந்தவர்களையும் சொல்லலாம்.

**கனடாவில் புலம்பெயர் நிகழ்வுகள் :**

(i) தமிழ் அகதிகள் கனடாவுக்குக் குடிபெயரத் தொடங்கியது 1983 ஆம் ஆண்டுகளுக்குப் பின்னர்தான். அவர்கள் குடியேறிய சில வருடங்களிலேயே பத்திரிகைகளும் ஆரம்பித்துவிட்டார்கள். நிரந்தர வேலை கிடையாது. அடுத்த வேளை உணவு பற்றி நிச்சயமில்லை. ஆனால் பத்திரிகைகளும் இலக்கிய சஞ்சிகைகளும் தொடங்கியுள்ளனர்.

(ii) புது நாட்டில் புது வாழ்க்கையைப் பதிவு செய்கின்றனர். இன்றைய கணினி யுகத்தில் தமிழ் கற்பது இலகுவாகிவிட்டது. தமிழர்கள் எட்டுக்கோடிப் பேர் உலகம் முழுவதும் இருக்கிறார்கள்.

(iii) நியூசிலாந்திலிருந்து அலாஸ்காவரை பரந்துபோய்ப் புலம்பெயர் தமிழர்கள் பத்து லட்சம் பேர் வாழ்கிறார்கள்.

(iv) அதனால்தான் ‘சூரியன் மறையாத தமிழ்ப் புலம்’ என்று சொல்லும் அளவிற்குத் தமிழர்கள் புலம் பெயர்ந்துள்ளனர்.

**அ. முத்துலிங்கத்தின் திணைப் பாகுபாடு :**

(i) சங்க இலக்கியத்தின் எட்டுத் தொகையில் ஒன்று ஐங்குறுநூறு. ஐவகை நிலத்திற்கும் ஒவ்வொரு நூறு பாடலாக ஐந்நூறு பாடல்கள் கொண்டது.

(ii) அந்நூலில் பனியும் பனி சார்ந்த நிலத்துக்கும் பாடல்கள் இல்லை. புலம்பெயர்ந்த பத்து இலட்சம் மக்கள் சென்றடைந்தது பனிப் பிரதேசங்களுக்குத்தான்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# இயற்கை வேளாண்மை

உரைநடை உலகம்

**தெரிந்து தெளிவோம் :**

- பனைமரத்திலிருந்து கிடைக்கும் பதநீரிலிருந்து பனங்கற்கண்டு, கருப்பட்டி போன்றவற்றைத் தயாரித்து விற்பதன்மூலம் அதிக வருவாய் கிடைக்கும். இவ்வாறு ஒரு பொருளை மேம்படுத்தப்பட்ட மாற்றுப் பொருள்களாக மாற்றுவதை மதிப்புக் கூட்டுப்பொருள் என அழைக்கின்றனர்.
- “இயற்கை அனைத்தையும் வாரி வழங்கும் தாய். அதே நேரம் எளிதில் சிதைந்துவிடும் வகையில் மென்மையானதும்கூட நிலத்தின் வளத்தை அக்கறையுடன் நன்முறையில் பராமரித்தால், பதிலுக்கு அதுவும் மனிதத் தேவைகளை நல்ல முறையில் நிறைவு செய்யும். விவசாயத்தின் வசந்தகாலமாக இயற்கை வேளாண்மை எல்லாக் காலத்திலும் திகழும்.”

– மசானபு ஃபுகோகோ

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

காலாண்டுத் தேர்வு 2018, அரையாண்டுத் தேர்வு 2019

**1. மண்ணுக்கு வளம் சேர்ப்பன –**

அ) மண்புழு ஆ) ஊடுபயிர்

இ) இயற்கை உரங்கள் ஈ) இவை மூன்றும்

**விடை: ஈ) இவை மூன்றும்**

காலாண்டுத் தேர்வு 2019

**2. கருப்பட்டி, பனங்கற்கண்டு போன்றவை**

அ) மதிப்புக் கூட்டுப் பொருள்கள் ஆ) நேரடிப்பொருள்கள்

i) அ – மட்டும் சரி ii) ஆ – மட்டும் சரி iii) இரண்டும் சரி iv) அ – தவறு, ஆ– சரி

**விடை: i) அ – மட்டும் சரி**

**குறுவினா**

அரையாண்டுத் தேர்வு 2018, காலாண்டுத் தேர்வு 2019

**1. தமிழ்நாட்டின் மாநில மரம் – சிறுகுறிப்பு வரைக.**

(i) தமிழ்நாட்டின் மாநில மரம் பனைமரம் ஆகும்.

(ii) பனைமரம் ஏழைகளின் கற்பக விருட்சமாகும். இது ஒரு சிறந்த காற்றுத் தடுப்பான் ஆகும்.

(iii) ஆழத்தில் நீர்மட்டம் குறையாமல் நீரைச் சேமித்து வைக்கின்ற தன்மையுடையது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் குறையாது. பனைமரம் வளர, அதிக அளவுக்குத் தண்ணீர்த் தேவையில்லை.

(iv) பனை ஏழு ஆண்டுகளில் காய்க்கத் தொடங்கிவிடும். நுங்கு, பதநீர் முதலியன கிடைக்கின்றன. அவற்றிலிருந்து கருப்பட்டி, பனங்கற்கண்டு ஆகியவை தயாரிக்கப்படுகின்றன.

**சிறுவினா**

**1. வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமா? – நும் கருத்தை எழுதுக.**

காலாண்டுத் தேர்வு 2019, மார்ச் 2020

**வேதிக்கலப்பில்லாத பூச்சிக்கொல்லி சாத்தியமே:**

(i) வேப்பங்கொட்டை, நொச்சி இலை, புங்கன், பிரண்டை, கற்றாழை ஆகிய அனைத்தையும் நன்றாக இடித்து கோமியத்தில் ஊற வைத்துப் பயிர்களில் தெளித்தால் தாவரத்திலுள்ள பூச்சிகள் வெளியேறும். இதனை ‘இயற்கைப் பூச்சிக்கொல்லி’ என்கிறோம்.

(ii) செயற்கைப் பூச்சிக் கொல்லிகளைப் பயன்படுத்துவதால் அது பூச்சியை மட்டும் கொல்லாமல் விளைகின்ற பயிர்க்குள்ளேயும் ஊடுருவுகிறது. அதனை உட்கொள்ளும் மக்களுக்குப் புற்றுநோய், வயிற்றுப்புண் என இன்னும் பல நோய்கள் வருகின்றன.

(iii) வேதிகலப்பில்லாத இயற்கை உர பூச்சிக்கொல்லியைப் பயன்படுத்தினால் நுண்ணுயிர்ப் பெருக்கம் குறையாமல், மண் சத்து வீணாகாமல் மண்வளமும் அதிகமாகும். இதனால் வேதிகலப்பில்லாத பூச்சிக்கொல்லி நடைமுறைக்குச் சாத்தியமாகும் என்பதில் ஐயமில்லை.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 2 மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# ஏதிலிக்குருவிகள்

- அழகிய பெரியவன் கவிதைப்பேழை

**பாடல்**

குருவிகளையும்
கூடுகளையும்
பார்க்கக் கூடவில்லை
முன்பென்றால் ஊரில்
அடைமழைக்காலம்
ஆற்றில் நீர் புரளும்
கரையெல்லாம் நெடுமரங்கள்
கரைகின்ற பறவைக் குரல்கள்
போகும் வழியெல்லாம்
தூக்கணாங்குருவிக் கூடுகள்
காற்றிலாடும் புல் வீடுகள்

மூங்கில் கிளையமர்ந்து
சுழித்தோடும் நீருடன்
பாடிக்கொண்டிருக்கும் சிட்டுகள்
மண்ணின் மார்பு
சுரந்த காலமது
வெட்டுண்டன மரங்கள்
வான் பொய்த்தது
மறுகியது மண்
ஏதிலியாய்க் குருவிகள்
எங்கோ போயின.



– அழகிய பெரியவன்

**பொருளுரை :**

உயிர்களின் இருப்பை இயற்கைச் சூழலே முடிவு செய்கிறது. இயற்கைக்கும் மனிதர்க்கும் தொப்புள்கொடி மழைத்துளி. மண்ணில் முதல் துளி விழுகையில் உயிர்கள் மலர்கின்றன. சூழலியல் மாற்றத்தால் நிகழ்ந்து கொண்டிருக்கும் அவலத்தைக் காட்சிப்படுத்துகிறது இக்கவிதை.

குருவிகளையும் கூடுகளையும் பார்க்கக் கூட முடியவில்லை. இதற்குக் காரணம் மரங்கள் வெட்டப்படுகின்றன. மரங்கள் வெட்டப்படுவதால் மழை பொழிவு முற்றிலும் பொய்த்து விடுகிறது. இதனால் மண் இறுக்கம் காட்டுகிறது. இந்நிலையில் ஏதிலியாய்க் குருவிகள் எங்கோ போயின. சிதறும் தானியங்கள்தான் இந்தச் சிட்டுக் குருவிகளின் பிரதான உணவு. இன்று நவீன மயமானதன் விளைவு, எல்லா தானியங்களும் பாலிதீன் பைகளில் வந்துவிட்டன. சிட்டுக்குருவிகளின் குஞ்சுகளுக்கு உணவுக்கு அவைகள் தோட்டத்துச் சிறு பூச்சிகள், புழுக்களையே முழுவதும் நம்பி உள்ளன. ஆனால் இன்று நமது நாட்டுத் தாவரங்களும், புற்களும் இல்லாததால் அதை நம்பி வாழும் புழுக்கள், பூச்சிகள் அரிதாகிவிட்டன.

கைப்பேசி கோபுரங்களில் இருந்து வெளியாகும் மின் காந்த அதிர் வலைகளால் பறவைகள் எண்ணிக்கை பெருமளவு குறையத் தொடங்கி உள்ளது. செயற்கை உரங்களால் நம் மண்ணையும், நம் வாழ்வையும் நஞ்சாக்கி வருகிறோம். முன்பு ஊரில் அடை மழைக்காலம் ஆற்றில் நீர் புரளும் கரையெல்லாம் நெடுமரங்கள் கரைகின்ற பறவைக்குரல்கள். போகும் வழியெல்லாம் தூக்கணாங்குருவிக்கூடுகள், காற்றிலாடும் புல் வீடுகள், மூங்கில் கிளையில் அமர்ந்து சுழித்தோடும் நீருடன் பாடிக் கொண்டிருக்கும் சிட்டுக் குருவிகள். ஆனால் இன்று கேள்விக்குறிதான்?

**ஆசிரியர் குறிப்பு :**

- வேலூர் மாவட்டம், பேரணாம்பட்டைச் சேர்ந்த அழகிய பெரியவனின் இயற்பெயர் அரவிந்தன். புதினம், சிறுகதை, கவிதை, கட்டுரை, போன்ற படைப்புத் தளங்களில் இயங்குபவர்.
- 'தகப்பன் கொடி' புதினத்திற்காக 2003 ஆம் ஆண்டில் தமிழக அரசின் விருது பெற்றவர்.
- அரசுப் பள்ளி ஒன்றில் ஆசிரியராகப் பணிபுரிகிறார்.
- குறடு, நெறிக்கட்டு உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் உனக்கும் எனக்குமான சொல், அரூப நஞ்சு ஆகிய கவிதைத் தொகுப்புகளும், மீள்கோணம், பெருகும் வேட்கை உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் இவரின் படைப்புகள்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**2. உங்களது மழைக்கால அனுபவங்களைக் கவிதையாக வெளிப்படுத்துக.**

நீ
வரும்போது
மேகங்கள் கருமையாகும்
மனமோ மகிழ்ச்சியாகும்.
நீ
என் மீது பட்டதும்
உடலும் உள்ளமும் சிலிர்க்கும்
என்னுடன் சேர்ந்து மண்ணும்.

உன்னோடு நனைந்து நனைந்து
ரம்மியமாக ரசிப்பேன்.
உன்னை
என் இரு கைகளில் பிடிக்கும்போது
அளவில்லா ஆனந்தம்
எனக்கும் உனக்குந்தான்.

## அரசு தேர்வு வினா - விடைகள்

**பலவுள் தெரிக.**

**1. உலகச் சிட்டுக்குருவி நாள் ----------** (மு.ப.இடைத்தேர்வு 2018)

அ) மார்ச் - 20 ஆ) அக்டோபர்- 20
இ) டிசம்பர் - 20 ஈ) ஜுன் - 20

**விடை:** அ) மார்ச் - 20

☆☆☆



இயல் 2

**மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்**

# காவியம்

- பிரமிள் கவிதைப்பேழை

**பாடல்**

**சிறகிலிருந்து பிரிந்த
இறகு ஒன்று
காற்றின் தீராத பக்கங்களில்
ஒரு பறவையின் வாழ்வை
எழுதிச் செல்கிறது .**



– பிரமிள்

**பொருளுரை :**

இறகுகளின் தொகுதியைச் சிறகு என்பர். சிறகிலிருந்து பிரிந்த இறகு, நிலத்துக்கும் வானுக்கும் இடைப்பட்ட பகுதியில் நிகழும் காற்றின் தீராத தழுவல்களால் மண்ணில் வீழாது தன் வாழ்வை எழுதுகிறது. வாழ்வு என்பது காவியத்துக்கான பொதுவான பாடுபொருள். சிறகிலிருந்து பிரிந்த இறகு ஒன்று காற்றின் தீராத பக்கங்களில் ஒரு பறவையின் வாழ்வை எழுதிச் செல்கிறது.

**ஆசிரியர் குறிப்பு :**

- பிரமிள் என்ற பெயரில் எழுதிய சிவராமலிங்கம் இலங்கையில் பிறந்தவர். இவர் பானுசந்திரன், அரூப் சிவராம், தருமு சிவராம் போன்ற பல புனை பெயர்களில் எழுதியவர்.
- புதுக்கவிதை, விமர்சனம்,சிறுகதை, நாடகம், மொழியாக்கம் என விரிந்தே தளத்தில் இயங்கியவர். ஓவியம், சிற்பம் ஆகியவற்றிலும் ஈடுபாடு கொண்டிருந்தார். இவருடைய கவிதைகள் முழுமையாகப் பிரமிள் கவிதைகள் என்ற பெயரில் தொகுக்கப்பட்டுள்ளன.
- **லங்காபுரிராஜா** உள்ளிட்ட சிறுகதைத் தொகுப்புகளும் **நட்சத்திரவாசி** என்னும் நாடகமும் **வெயிலும் நிழலும்** உள்ளிட்ட கட்டுரைத் தொகுப்புகளும் வெளிவந்துள்ளன.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000
www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 2

மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# திருமலை முருகன் பள்ளு

- பெரியவன் கவிராயர் கவிதைப்பேழை



பாடல்

**வடகரை நாடு**

**மலரில் ஆரளி இந்துளம் பாடும்**
**மடைஇ டங்கணி வந்துளம் ஆடும்**
**சலச வாவியில் செங்கயல் பாயும்**
**தரளம் ஈன்றவெண் சங்கயல் மேயும்**
**குலமின் னார்மழை பெய்யெனப் பெய்யும்**
**குடங்கை ஏற்பவர் செய்யெனச் செய்யும்**
**புலவர் போற்றும் திருமலைச் சேவகன்**
**புகழ்வட ஆரி நாடெங்கள் நாடே.**

**பொருளுரை :**

வடகரை நாட்டில் மலரில் மொய்க்கும் வண்டுகள் **இந்தளம்** என்ற பண்ணை ரீங்காரமிட்டுப் பாடும். மீனைப் பிடித்து உண்பதற்காக வந்த **உள்ளான் பறவை** வண்டின் இசைகேட்டு வாய்க்காலின் மதகுகளிடையே கட்டப்பட்ட சங்கிலியில் வாலை ஆட்டிக்கொண்டு அமர்ந்திருக்கும்.

தாமரைத் தடாகத்தில் **மீன்கள்** துள்ளிப் பாய்ந்து விளையாடும். முத்துகளை ஈன்ற வெண்மையான **சங்குகள்** பரவிக் காணப்படும். மின்னலையொத்த பெண்கள், பெய் என்றால் **மழை** பெய்யும் உள்ளங்கை ஏந்தி இரந்து உண்ணும் இயல்புடைய முனிவர்கள் கூறும் வார்த்தைகள் மெய்யாகும். இத்தன்மை கொண்ட திருமலையில் புலவர்கள் போற்றுகின்ற **திருமலைச் சேவகன்** வீற்றிருக்கின்றார்.



பாடல்

**தென்கரை நாடு**

**வளருங் காவில் முகில்தொகை ஏறும் - பொன்**
**மாடம் எங்கும் அகிற்புகை நாறும்**
**குளிரும் மஞ்ஞையும் கொண்டலும் காக்கும்**
**கோல்முறை மன்னர் மண்டலங் காக்கும்**
**இளமின் னார்பொன் னரங்கில் நடிக்கும் - முத்(து)**
**ஏந்தி வாவித் தரங்கம் வெடிக்கும்**
**அளியுலாம் கொன்றை சூடுங் குற்றாலத் - தென்**
**ஐயன்தென் ஆரி நாடெங்கள் நாடே.**

– பெரியவன் கவிராயர்

**பொருளுரை :**

தென்கரை நாட்டின் நீண்டு வளர்ந்த சோலையில் **மேகக் கூட்டங்கள்** தங்கிச் செல்லும். இந்நாட்டில் உள்ள பொன்னாலான மாடமாளிகைகளில் **அகில்புகை**யின் நறுமணம் பரவிக்கொண்டே இருக்கும். இம்மாளிகைகளை மயில்களும் கார்கால மேகங்களும் சூழ்ந்து காக்கும்.

செங்கோலைக் கொண்ட மன்னர் தென்கரை நாட்டை நீதி தவறாது **காவல்** காப்பர். இளைய பெண்கள் பொன்னாலான அரங்கில் நடித்து விளையாடி மகிழ்ந்திருப்பர். இங்குள்ள குளங்களின் அலைகள் முத்துகளை ஏந்தி வரும் அவ்வலைகள் கரைகளில் மோதும்பொழுது முத்துகள் சிதறி வெடிக்கும். இத்தன்மை கொண்ட குற்றாலத்தில் வண்டுகள் மொய்க்கும். கொன்றை மலரைச் சூடிய தென்னாடுடைய சிவபெருமானாகிய குற்றாலநாதர் வீற்றிருக்கின்றார்.

**சொல்லும் பொருளும் :**

1. ஆரளி – மொய்க்கின்ற வண்டு
2. இந்துளம் – இந்தளம் எனும் ஒரு வகைப் பண்
3. இடங்கனி – சங்கிலி
4. உளம் – உள்ளான் என்ற பறவை
5. சலசவாவி – தாமரைத்தடாகம்
6. தரளம் – முத்து





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 2

மாமழை போற்றுதும் - இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# ஐங்குறுநூறு

- பேயனார் கவிதைப்பேழை

பாடல்

ஆடுகம் விரைந்தே

காயா கொன்றை நெய்தல் முல்லை
போதவிழ் தளவமொடு பிடவலர்ந்து கவினிப்
பூவணி கொண்டன்றால் புறவே
பேரமர்க் கண்ணி ஆடுகம் விரைந்தே. – பேயனார்

(கிழவன் பருவம் பாராட்டும் பத்து. 412)

**பொருளுரை :**



(பொருளீட்டுவதற்காக வெளியூர் சென்றான் தலைவன், அவன், தான் வருவதாகச் சொல்லிவிட்டுச் சென்ற காலத்திற்கு முன்னரே வீட்டிற்குத் திரும்புகிறான். வருவதாகக் கூறிச் சென்ற மழைக்காலம் முடியும் முன்னே வந்து விட்டதனை உணர்த்த நினைக்கிறான்)

“பெரிய அழகிய கண்களையுடையவளே! அழகிய மாலை நேரத்தில் முல்லை நிலத்தில் காயா, கொன்றை, நெய்தல், முல்லை, செம்முல்லை, பிடவம் ஆகிய மலர்கள் பூத்திருக்கின்றன. அப்பூக்களைப் பார்த்து மகிழ்ந்து ஆட, விரைந்து வா” (என்று தலைவன் தன் தலைவியை அழைக்கிறான்)

**சொல்லும் பொருளும் :**

1. காயா, கொன்றை, நெய்தல், முல்லை, தளவம், பிடவம் – மழைக்கால மலர்கள்
2. போது – மொட்டு
3. அலர்ந்து – மலர்ந்து
4. கவினி – அழகுற

மழைக்கால மலர்கள்





**திணை** – முல்லை

**துறை** – பருவங் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.

**நூற்குறிப்பு :**

- ஐந்து + குறுமை + நூறு = ஐங்குறுநூறு. மூன்றடிச் சிற்றெல்லையும் ஆறடிப் பேரெல்லையும் கொண்ட அகவற்பாக்களால் ஆன நூல்.
- திணை ஒன்றிற்கு நூறு பால்களாக, ஐந்து திணைகளுக்கு ஐந்நூறு பாடல்கள் கொண்டது.
- ஐந்து திணைகளைப் பாடிய புலவர்கள்
  - (i) குறிஞ்சித்திணை – கபிலர்
  - (ii) முல்லைத்திணை – பேயனார்
  - (iii) மருதத்திணை – ஓரம்போகியார்
  - (iv) நெய்தல் திணை – அம்மூவனார்
  - (v) பாலைத்திணை – ஓதலாந்தையார்
- ஐங்குறுநூற்றின் கடவுள் வாழ்த்துப் பாடலைப் பாடியவர் பாரதம் பாடிய பெருந்தேவனார்.
- இந்நூலைத் தொகுத்தவர் புலந்துறை முற்றிய கூடலூர்க்கிழார். தொகுப்பித்தவர் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை.
- இல்லறத்தில் அன்பும் அறனும் சிறக்க வேண்டித் தலைவன் பொன்னும் பொருளும் ஈட்ட வெளியூர் செல்வது பற்றிப் பல சங்கப் பாடல்கள் பேசுகின்றன. மக்கள் வாழ்வோடு இயைந்த மலர்கள், தலைவனின் வரவைத் தலைவிக்கு அறிவிக்கும் பாடலிது.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



| | |
|---|---|
| நீர் | – குறுஞ்சுனை, கானாறு |
| உணவு | – வரகு, சாமை, முதிரை |
| பறை | – ஏறுகோட்பறை |
| யாழ் | – முல்லையாழ் |
| பண் | – சாதாரிப்பண் |
| தொழில் | – சாமை, வரகு விதைத்தல், களைகட்டல், நெல் அரிதல், ஏறு தழுவுதல், ஆநிரை மேய்த்தல். |

**சான்று :** "காயா கொன்றை நெய்தல் முல்லை" என்ற ஐங்குறுநூறு பாடல்.

**துறை விளக்கம் :** பருவங் (கார்காலம்) குறித்துப் பிரிந்த தலைமகன், அப்பருவத்திற்கு முன்னே வந்தமை தோன்ற தலைவிக்கு உரைத்தது.

☆ ☆ ☆

இயல் 2

மாமழை போற்றுதும் – இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# யானை டாக்டர்

- ஜெயமோகன்

விரிவானம்

**ஆசிரியர் குறிப்பு :**

ஜெயமோகன், நாகர்கோவிலைச் சேர்ந்தவர். **விஷ்ணுபுரம், கொற்றவை** உள்ளிட்ட பல புதினங்களோடு சிறுகதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். இயற்கை ஆர்வலர். யானையைப் பாத்திரமாக வைத்து **ஊமைச்செந்நாய், மத்தகம்** ஆகிய கதைகளையும் எழுதியுள்ளார். இந்தக் குறும் புதினம் '**அறம்**' என்னும் சிறுகதைத் தொகுப்பில் இடம்பெற்று உள்ளது.

**தெரிந்து தெளிவோம் :**

- மனிதர்கள் தவிர்த்த மற்றைய விலங்குகளுள் யானைகள், அதிக நாள்கள் வாழும் தரைவாழ் விலங்குகள் ஆகும். வேட்டை விலங்குகளாகவும் காட்டுயிர்களின் உணவுப் படிநிலையில் உயர்நிலையிலுள்ளவையாகவும் இருக்கின்ற சிங்கம், புலி முதலியனவும் நெருங்க அஞ்சும் வலிமை கொண்டவை யானைகள். இவை குடும்பமாக வாழும்; மிகுதியான நினைவாற்றல் கொண்டவை. யானைகளுள் **மூன்று** வகைகள் இன்று உலகில் எஞ்சியுள்ளன. அவை **ஆப்பிரிக்கப் புதர்வெளி யானைகள், ஆப்பிரிக்கக் காட்டு யானைகள், ஆசிய யானைகள்** ஆகியனவாகும். பொதுவாக எல்லா யானைகளும் ஏறத்தாழ **70 ஆண்டுகள்** வரை உயிர் வாழ்கின்றன.
- யானை டாக்டர் என்று அழைக்கப்பட்ட **டாக்டர் வி. கிருஷ்ணமூர்த்தி**, தமிழகத்தின் முக்கியமான காட்டியல் வல்லுநர்களில் ஒருவர். யானைகளுக்காகத் தம் வாழ்நாளையே அர்ப்பணித்தவர். உலகப் புகழ் பெற்ற அறிவியல் இதழ்களில் ஆய்வுக்கட்டுரைகளை எழுதியிருக்கின்றார். வனப்பேணுநர்களுக்கு வழங்கப்படும் மிக உயரிய விருதான **வேணுமேனன் ஏலீஸ் விருதினை** 2000 ஆம் ஆண்டில் பெற்றார். தமிழகக் கோவில் யானைகளுக்கு வனப் புணர்ச்சித் திட்டத்தை அறிமுகப்படுத்தி, அரசின் மூலம் செயல்படுத்தியவர்.

**நிகண்டுகளில் யானையைக் குறிக்கும் சொற்கள் :**

| | | |
|---|---|---|
| 1. கயம் | 8. வாரணம் | 15. ஆனை |
| 2. வேழம் | 9. அஞ்சனாவதி | 16. இபம் |
| 3. களிறு | 10. அத்தி | 17. இரதி |
| 4. பிளிறு | 11. அத்தினி | 18. குஞ்சரம் |
| 5. களபம் | 12. அரசுவா | 19. வல்விலங்கு |
| 6. மாதங்கம் | 13. அல்லியன் | 20. கரி |
| 7. கைம்மா | 14. அனுபவை | 21. அஞ்சனம். |



orders@surabooks.com
Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 2

மாமழை போற்றுதும் – இயற்கை, வேளாண்மை, சுற்றுச்சூழல்

# புணர்ச்சி விதிகள்

இனிக்கும் இலக்கணம்

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1. குற்றியலுகரப் புணர்ச்சியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

(i) குற்றியலுகரச் சொற்களில் நிலைமொழியின் இறுதியில் உள்ள குற்றியலுகரம் வருமொழியின் முதலில் உள்ள உயிரெழுத்துடன் புணரும் போது, தான் ஏறிய மெய்யை நிறுத்தி உகரம் மறையும்.

(ii) பின்நிலைமொழி இறுதியில் உள்ள மெய், வருமொழி முதல் எழுத்தாகிய உயிரெழுத்துடன் புணரும். 'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும்'. – நன்னூல் – 164

**எடுத்துக்காட்டு :**

மாசு + அற்றார் – மாசற்றார்

'உயிர்வரின் உக்குறள் மெய்விட்டு ஓடும் எனும் விதிப்படி வருமொழி முதலில் உயிர் (அ) வந்ததால், நிலைமொழி ஈற்று உகரம் (சு – ச் – உ) கெட்டு, மாசு + அற்றார் = மாச் + அற்றார் என்றானது. பின்பு 'உடல்மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே' எனும் விதிப்படி நிலைமொழி ஈற்று மெய்யும் (ச்) வருமொழி முதல் உயிரும் (அ) புணர்ந்து (ச் + அ = ச) மாசற்றார் என்றானது.

(iii) ட், ற் என்னும் இரு மெய்களோடு ஊர்ந்து வரும் நெடில் தொடர் உயிர்த்தொடர்க் குற்றியலுகரங்கள் வருமொழியோடு சேரும் போது ஒற்று இரட்டித்துப் புணரும்.

"நெடிலோடு உயிர்த்தொடர்க் குற்றுகரங்களுள்
டறஒற்று இரட்டும் வேற்றுமை மிகவே" – நன்னூல் – 183

**எடுத்துக்காட்டு :**

ஆறு + பாலம்
ஆற்று + பாலம்
ஆற்றுப்பாலம்

**2. கருவிழி, பாசிலை, சிறியன், பெருங்கல் ஆகிய சொற்களைப் பிரித்துப் புணர்ச்சி விதி தருக.**

(i) **கருவிழி** – ஈறுபோதல் எனும் விதிப்படி 'மை' விகுதி கெட்டது.

கருமை + விழி = கரு + விழி

கரு + விழி = கருவிழி என்றானது.

(ii) **பாசிலை** – பசுமை + இலை

ஈறுபோதல் எனும் விதிப்படி 'மை' விகுதி கெட்டது

பசுமை + இலை = பசு + இலை என்றானது பின்பு

ஆதி நீடல் எனும் விதிப்படி 'ப' என்னும் குறில் 'பா' என நெடிலாயிற்று. பாசு + இலை என்றானது. பின்பு உயிர்வரின் உக்குறள் மெய் விட்டோடும் என்றும் விதிப்படி பாசு + இலை= பாச் + இலை என்றானது. பின்பு உடல் மேல் உயிர் வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி பாச் + இலை – பாசிலை என்றானது.

(iii) **சிறியன்** – சிறுமை + அன் என்றானது பின்பு உயிர் முன் உயிர் புணராது. இரண்டையும் புணர உடம்படு மெய் துணை நிற்கும். "இ ஈ ஐ என்னும் மூன்று உயிர் எழுத்துகளுக்கு முன் உயிர்வரின் இரண்டிற்கும் இடையில் 'ய்' என்ற யகர உடம்படுமெய் தோன்றும். சிறி + ய் + அன் – சிறிய் + அன் என்றானது. பின்பு உடல்மேல் உயிர்வந்து ஒன்றுவது இயல்பே எனும் விதிப்படி சிறிய் + அன் – சிறியன் என்றானது.

(iv) **பெருங்கல்** – பெருமை + கல்

ஈறு போதல் எனும் விதிப்படி 'மை' விகுதி கெட்டது. பெருமை + கல் – பெரு + கல் என்றானது. பின்பு இனமிகல் எனும் விதிப்படி வருமொழி முதலில் உள்ள வல்லினத்திற்கு (க – க் + அ) இனமான மெல்லினம் (ங்) மிகுந்து பெருங் + கல் – பெருங்கல் என்றானது.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores

இயல் 3

பீடு பெற நில் - பண்பாடு

# மலை இடப்பெயர்கள் : ஓர் ஆய்வு

- ஆர் பாலகிருஷ்ணன், இ.ஆ.ப. உரைநடை உலகம்

**ஆசிரியர் குறிப்பு :**

இந்தியவியல் மற்றும் திராவிடவியல் ஆய்வாளரான ஆர்.பாலகிருஷ்ணன் இ.ஆ.ப, 28 ஆண்டுகளாக, இடப்பெயராய்வில் ஈடுபட்டு வருகிறார். வடமேற்கு இந்தியாவில் இன்றுவரை வழக்கிலுள்ள 'கொற்கை, வஞ்சி, தொண்டி வளாகத்தை' ஆய்வுலகின் கவனத்திற்குக் கொண்டு வந்தவர். தினமணி நாளிதழில் துணையாசிரியராகவும் கணையாழி இலக்கிய இதழின் ஆலோசகர் குழுவிலும் தீவிரப் பங்காற்றியிருக்கிறார். **அன்புள்ள அம்மா, சிறகுக்குள் வானம்** உள்ளிட்டவை இவர்தம் நூல்கள். 1984ஆம் ஆண்டு இந்திய ஆட்சிப்பணித் தேர்வை, முதன்முதலாக, முழுவதுமாகத் தமிழிலேயே எழுதி, முதல் முயற்சியிலேயே தேர்ச்சி பெற்றவர். தற்போது ஒடிசா மாநிலத்தில் கூடுதல் தலைமைச் செயலர் மற்றும் அம்மாநிலத்தின் வளர்ச்சி ஆணையராகப் பொறுப்பில் இருக்கிறார். பாடப்பகுதி **'சிந்துவெளிப் பண்பாட்டின் திராவிட அடித்தளம்'** என்னும் இவரது நூலிலிருந்து எடுக்கப்பட்டது.

## நம்மை அளப்போம்

### பலவுள் தெரிக.

**1. கூற்று – "கோடு" என்பது தமிழ்ச்சொல் ஆகும்.**

**விளக்கம் – கோடு என்னும் சொல்லுக்கு மலையுச்சி, வல்லரண், கோட்டை என்னும் பொருள்களும் உண்டு.**

அ) கூற்று சரி, விளக்கம் தவறு
ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி
இ) கூற்று தவறு, விளக்கம் சரி
ஈ) கூற்றும் தவறு, விளக்கமும் தவறு

**விடை: ஆ) கூற்றும் சரி விளக்கமும் சரி**

### குறுவினா

**1. "கோட்டை" என்னும் சொல் திராவிட மொழிகளில் எவ்வாறு எடுத்தாளப்பட்டுள்ளது?**

திராவிட வேர்ச்சொல் அகராதி, கோட்டை என்ற சொல்லோடு தொடர்புடைய பல்வேறு திராவிட மொழிச் சொற்களைக் கீழ்வருமாறு பட்டியலிடுகிறது.

| | |
|---|---|
| தமிழ் | கோட்டை, கோடு |
| மலையாளம் | கோட்ட, கோடு |
| கன்னடம் | கோட்டே, கோண்டே |
| தெலுங்கு | கோட்ட |
| துளு | கோட்டே |
| தோடா | க்வாட் |

### சிறுவினா

**1. 'மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது' – என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விவரிக்க.**

(i) மலை, மனித சமுதாயத்தின் ஆதி நிலமாகும். **தமிழ் அகத்திணையியல்** மலை மற்றும் சார்ந்த பகுதியைக் குறிஞ்சி என்று குறிக்கும். **காலாண்டு, அரையாண்டுத் தேர்வு 2019**

(ii) 'சேயோன் மேய மைவரை உலகம்' என்று உரைக்கிறது தொல்காப்பியம். "விண்பொரு நெடுவரை குறிஞ்சிக்கிழவ" என்கிறது திருமுருகாற்றுப்படை.

(iii) பழந்தமிழ் இலக்கியங்கள் குறிப்பிடும் கடையெழு வள்ளல்கள் எழுவருமே மலைப் பகுதிகளின் தலைவர்களாகவே விளங்கியுள்ளனர். பெருநிலப் பகுதிகளை ஆண்ட முடிமன்னர்களுக்குக்கூட வழங்காத பெருமையைப் பழந்தமிழ் இலக்கியங்கள் இக்குறுநிலத் தலைவர்களுக்கு அளிப்பதைப் பரக்கக் காணலாம்.

(iv) தமிழ்நாட்டில் மட்டும் 'மலை' என்ற சொல் 17 இடப்பெயர்களில் முன்னொட்டாகவும் 84 இடப்பெயர்களில் பின்னொட்டாகவும் இடம் பெறுகின்றது.

(v) கோடு என்ற தமிழ்ச் சொல்லுக்கு மலையுச்சி, சிகரம், மலை என்ற பொருளுண்டு. மலை மனித வாழ்வில் சிறப்பிடம் பெற்றுள்ளது என்பதற்கு மேற்காட்டிய எடுத்துக்காட்டுகளே தகுந்த சான்றாகும்.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 3

பீடு பெற நில் - பண்பாடு

# காவடிச்சிந்து

- சென்னிகுளம் அண்ணாமலையார்

கவிதைப்பேழை

| பாடல் – கோயில் வளம் | |
|---|---|
| சென்னி குளநகர் வாசன் - தமிழ்<br>தேறும் அண்ணாமலை தாசன் - செப்பும்<br>செகமெச்சிய மதுரக்கவி<br>யதனைப்புய வரையிற்புனை<br>தீரன்; அயில் வீரன்.<br>வன்ன மயில்முரு கேசன் - குற<br>வள்ளி பதம்பணி நேசன் - உரை<br>வரமேதரு கழுகாசல<br>பதிகோயிலின் வளம்நான்மற<br>வாதே சொல்வன் மாதே!<br>கோபுரத் துத்தங்கத் தூவி - தேவர்<br>கோபுரத் துக்கப்பால் மேவி - கண்கள்<br>கூசப்பிர காசத்தொளி<br>மாசற்று விலாசத்தொடு<br>குலவும் புவி பலவும்.<br>நூபுரத் துத்தொனி வெடிக்கும் - பத<br>நுண்ணிடை மாதர்கள் நடிக்கும் - அங்கே<br>நுழைவாரிடு முழவோசைகள்<br>திசைமாசுணம் இடியோ என<br>நோக்கும் படி தாக்கும். | சந்நிதி யில்துஜஸ் தம்பம் - விண்ணில்<br>தாவி வருகின்ற கும்பம் - எனும்<br>சலராசியை வடிவார்பல<br>கொடிசூடிய முடிமீதிலே<br>தாங்கும்; உயர்ந் தோங்கும்.<br>உன்னத மாகிய இஞ்சி - பொன்னாட்டு<br>உம்பர் நகருக்கு மிஞ்சி - மிக<br>உயர்வானது பெறலால் அதில்<br>அதிசீதள புயல்சாலவும்<br>உறங்கும்; மின்னிக் கறங்கும்.<br>அருணகிரி நாவில் பழக்கம் - தரும்<br>அந்தத் திருப்புகழ் முழக்கம் - பல<br>அடியார்கணம் மொழிபோதினில்<br>அமராவதி இமையோர்செவி<br>அடைக்கும்; அண்டம் உடைக்கும்.<br>கருணை முருகனைப் போற்றித் - தங்கக்<br>காவடி தோளின்மேல் ஏற்றிக் - கொழும்<br>கனல்ஏறிய மெழுகாய்வரு<br>பவர்ஏவரும் இகமேகதி<br>காண்பார்; இன்பம் பூண்பார்.<br>– சென்னிகுளம் அண்ணாமலையார். |

**பொருளுரை:**



சென்னிகுளம் என்னும் நகரில் வாழ்கின்ற அண்ணாமலை தாசன் ஆகிய நான் பாடிய உலகம் போற்றும் காவடிச்சிந்து என்னும் மதுரமான கவிமாலையைத் தன் மலை போன்ற அகன்ற தோளில் சார்த்திக்கொள்கிறான் முருகன். அந்தக் **கழுகுமலைத் தலைவன்** முருகனின் கோவில் வளத்தை நான் சொல்கிறேன். கோவில் கோபுரத்தின் தங்கக் கலசம் தேவர் உலகை விட உயர்ந்து ஒளி வீசுகிறது. அவ்வொளி உலகங்கள் பலவற்றிலும் கண்கள் கூசும்படி பரவுகிறது. பெண்ணே! கடலில் வாழும் மீன், மகரம் போன்ற உருவ அமைப்புகள் கொண்ட கொடிகள் எல்லாம் சிறக்க, முருகன் கோவில் திகழ்கிறது. காவடி எடுக்கும் அடியார்கள் பாடும் திருப்புகழ் முழக்கமானது, அமராவதிப் பட்டினத்தில் உள்ள தேவர்களின் செவியைச் சென்று அடைக்கிறது. கழுகுமலை நகரின் கோட்டை உயரமானது. அதில் மேகங்கள் படிகின்றன. அவற்றிலிருந்து உருவாகும் மின்னல்கள் இருளைக் கிழிக்கின்றன. தமது நெஞ்சம் நெகிழ்ந்துருக, தங்கத்தினும் மேலான காவடியைத் தோளில் தூக்கிக் கனலில் உருகிய மெழுகென முருகனை நோக்கி வரும் பக்தர்கள் அருளைப் பெறுவார். இன்பம் அடைவார்.

**காவடிச்சிந்து :**

- தமிழ்நாட்டில் பண்டைக்காலம் முதல் நாட்டார் வழக்கிலுள்ள இசை மரபே காவடிச் சிந்து எனலாம்.
- முருகப்பெருமானின் வழிபாட்டிற்காகப் பால் முதலான வழிபாட்டுப் பொருட்களைக் கொண்டு செல்வோர், ஆடல் பாடல்களுடன் ஆலயங்களை நோக்கிச் செல்வர்.
- அவர்களின் வழி நடைப்பாடல் வகைகளிலிருந்து காவடிச்சிந்து எனும் பாவடிவம் தோன்றியது.

பீடு பெற நில்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**கூடுதல் சிறுவினா**

1. **குறிஞ்சித் திணையை விளக்குக.**

**முதற்பொருள் :** மலையும் மலை சார்ந்த இடமும்

**பொழுது :** சிறுபொழுது – யாமம், பெரும்பொழுது – கூதிர், முன்பனி

**கருப்பொருள் :**

| | |
|---|---|
| தெய்வம் | – முருகன் |
| மக்கள் | – குறவர், குறத்தியர் |
| பறவை | – கிளி, மயில் |
| விலங்கு | – புலி, கரடி, ஊர் – சிறுகுடி |
| ஊர் | – சிறுகுடி |
| மரம் | – அகில், சந்தனம், வேங்கை |
| நீர் | – சுனை, அருவி நீர் |
| பறை | – வெறியாட்டுப் பறை, தொண்டகப்பறை |
| யாழ் | – குறிஞ்சியாழ் |
| பண் | – குறிஞ்சி பண் |
| உணவு | – மாலை நெல், மூங்கிலரிசி |
| தொழில் | – தேன் எடுத்தல், கிழங்கு அகழ்தல் |
| உரிப்பொருள் | – புணர்தலும் புணர்தல் நிமித்தமும் |

**சான்று :** "அம்ம வாழி தோழி நம்மூர்ப்" என்ற குறுந்தொகைப் பாடல்

**துறை விளக்கம் :** தலைவன் தலைவியை மணம் முடிப்பது பற்றிப் பேச சான்றோரை அனுப்புகிறான். தலைவி, அப்போது எங்கே தன் பெற்றோர் மணம் பேச மறுத்துவிடுவார்களோ என்று கலங்குகிறாள். இந்நிலையில் தோழி அவளிடம் தலைவனின் தரப்பைத் தலைவியின் பெற்றோர் ஏற்றுக்கொண்டனர் என்று தேற்றுகிறாள்.

☆☆☆



இயல் 3 — **பீடு பெற நில் – பண்பாடு**

# புறநானூறு

– கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி — **கவிதைப்பேழை**

**பாடல்**



**உண்டால் அம்ம இவ்வுலகம் இந்திரர்**
**அமிழ்தம் இயைவது ஆயினும், இனிதுஎனத்**
**தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்!**
**துஞ்சலும் இலர் பிறர் அஞ்சுவது அஞ்சிப்**
**புகழ் எனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்**
**உலகுடன் பெறினும் கொள்ளலர்; அயர்விலர்;**
**அன்ன மாட்சி அனையர் ஆகித்**
**தமக்கென முயலா நோன்தாள்**
**பிறர்க்கென முயலுநர் உண்மை யானே. (182)** – கடலுள் மாய்ந்த இளம்பெருவழுதி

**பொருளுரை :**

தமக்காக உழைக்காமல் பிறர்க்காகப் பெரிய முயற்சியுடன் உழைப்பவர்கள். இந்திரனுக்குரிய அமிழ்தம் கிடைத்தாலும் அஃது உயிர்க் காப்பது என்பதற்காகத் தனித்து உண்ணமாட்டார்கள். யாரையும் வெறுக்க மாட்டார்கள். சோம்பலின்றிச் செயல்படுவார்கள். பிறர் அஞ்சுவதற்குத் தாமும் அஞ்சுவார்கள். புகழ்வரும் என்றால் தம் உயிரையும் கொடுப்பார்கள். உலகம் முழுவதும் கிடைப்பதாயிருந்தாலும் பழிவரும் செயல்களைச் செய்யார். எதற்கும் மனம் தளர மாட்டார்கள்.


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



பீடு பெற நில் - பண்பாடு

இயல் 3

# வாடிவாசல்

- சி.சு. செல்லப்பா

விரிவானம்

## தெரிந்து தெளிவோம் :

- **கலித்தொகையில் ஏறுதழுவல் :**

கொல்லேற்றுக் கோடஞ்சுவானை மறுமையும்
புல்லாளே, ஆய மகள்
அஞ்சார் கொலை ஏறு கொள்பவர் அல்லதை,
நெஞ்சிலார் தோய்தற்கு அரிய - உயிர்துறந்து
நைவாரா ஆய மகள் தோள். – கலி 103: 63–67

- அளவில் சிறுகதையைவிட நீளமாகவும் புதினத்தைவிடச் சிறியதாகவும் இருக்கும் கதை குறும்புதினம். இதனைக் **குறுநாவல்** என்றும் சொல்வர். சிறுகதைக்கும் புதினத்துக்கும் இடைப்பட்ட வடிவம் என்று கொள்ளலாம்.

## ஆசிரியர் குறிப்பு :

- சி.சு. செல்லப்பா சிறுகதை, புதினம், விமர்சனம், கவிதை, மொழிபெயர்ப்பு முதலாக இலக்கியத்தின் பல்வேறு தளங்களில் பங்களிப்புச் செய்திருக்கிறார்.
- சந்திரோதயம், தினமணி ஆகிய இதழ்களில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியுள்ளார்; "எழுத்து" இதழினைத் தொடங்கி நவீன தமிழ் இலக்கிய மறுமலர்ச்சிக்கு வித்திட்டவர்.
- **அவருடைய குறிப்பிடத்தக்க படைப்புகள் :** வாடிவாசல், சுதந்திர தாகம், ஜீவனாம்சம், பி.எஸ். ராமையாவின் சிறுகதைப் பாணி, தமிழ்ச் சிறுகதை பிறக்கிறது.
- இவருடைய **'சுதந்திர தாகம்'** புதினத்திற்கு 2001 ஆம் ஆண்டுக்கான சாகித்திய அகாதெமி விருது கிடைத்தது.

## நம்மை அளப்போம்

### நெடுவினா

**1. வாடிவாசல் கதை வாயிலாக நீங்கள் உணர்ந்த கருத்துகளை விளக்குக. (அ) வாடிவாசல் என்னும் குறும் புதினம் 'தமிழர் பண்பாட்டின் அடையாளம்' என்பதை நிறுவுக.** அ.மா.வி. காலாண்டுத் தேர்வு 2018,19 ஜூன் 2019, மார்ச் 2020

**முன்னுரை:**

வாடிவாசல் அது துள்ளி ஓடும் காளை மாடுகளின் வாசல். பழங்கால வீரவிளையாட்டான ஏறுதழுவுதலின் போது அதில் கலந்து கொள்ளும் காளைகளை ஒவ்வொன்றாக அவிழ்த்து விடும் இடம்தான் வாடிவாசல். அக்காளைகளின் மூக்கணாங்கயிறு மற்றும் காளையை இணைக்கும் கயிறு இவற்றையெல்லாம் அகற்றிவிட்ட பிறகுதான் போட்டிக்கு விடுவர். 'வாடிவாசல்' என்ற பெயரில் சி.சு. செல்லப்பா அவர்கள் எழுதியுள்ள நாவலைப் பற்றிக் காண்போம்.

**ஏறுதழுவுதலின் விதிமுறைகள்:**

இவ்விளையாட்டு மனிதர்களுக்கும் காளைக்கும் உள்ள நட்புறவைக் காட்டும். இதில் கலந்து கொள்ளும் காளைகளுக்கு எவ்விதத் துன்பத்தையும் கொடுக்கக்கூடாது. மனிதர்களுக்கு இரத்தம் வரலாம். ஆனால் காளைகளுக்கு ஒரு சொட்டு இரத்தம்கூட வரக்கூடாது.

**கதைச் சுருக்கம்:**

வாடிவாசலில் ஜமீன்தாரின் காளையான காரிக்கொம்பு(வாடிபுரம் காளை/கருப்புப் பிசாசு) வெளியே வந்தது. அங்கிருந்த அனைவரின் குரல்களிலும் ஒரு நடுக்கம். அக்காளை பரமசாதுவாக ஆடி அசைந்து வந்தது. மருதன், பிச்சி இருவரும் ஒருவருக்கொருவர் சைகை காட்டிக் கொண்டு காளையை அடக்க முயன்றனர். சிறிது நேரப் போராட்டத்திற்குள் பிச்சி காளையை அடக்கிவிட்டான். அவன் கண்களில் ஆனந்தக் கண்ணீர் வழிந்தது. காரணம் ஜமீன்தாரின் காரிக் கொம்பு காளையினால் பிச்சியின் தந்தை இறந்துவிட்டார். தந்தை இறப்பிற்குக் காரணமான காரியை அடக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் வந்த அவன் அக்காளையை அடக்கி பரிசுப் பொருளைப் பெற்றான்.

**ஏறுதழுவுதலின் போது நிகழும் வர்ணனைகள்:**

"கிழக்கத்தியான் காரியைப் பிடிக்கப் போறான்."
"பய செத்தான்."

பீடு பெற நில்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



பீடு பெற நில் - பண்பாடு

இயல் 3

# பகுபத உறுப்புகள்

இனிக்கும் இலக்கணம்

நினைவில் கொள்க.

| | |
|---|---|
| இறந்தகால இடைநிலைகள் | த், ட், ற், இன் |
| நிகழ்கால இடைநிலைகள் | கிறு, கின்று, ஆநின்று |
| எதிர்கால இடைநிலைகள் | ப், வ் |
| எதிர்மறை இடைநிலைகள் | ஆ, அல், இல் |
| தன்னை ஒருமை வினைமுற்று விகுதிகள் | என், ஏன், அல், அன்,கு, டு, து, று |
| தன்மைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | எம்.ஏம், அம், ஆம், ஒம், கும், டும், தும், றும் |
| முன்னிலை ஒருமை வினைமுற்று விகுதிகள் | ஐ, ஆய், இ |
| முன்னிலைப் பன்மை வினைமுற்று விகுதிகள் | இர், ஈர், மின் |
| படர்க்கை ஆண்பால் வினைமுற்று விகுதிகள் | அன், ஆன் |
| படர்க்கைப் பெண்பால் வினைமுற்று விகுதிகள் | அள், ஆள் |
| படர்க்கைப் பலர்பால் வினைமுற்று விகுதிகள் | அர், ஆர், ப, மார், கள் |
| படர்க்கை ஒன்றன்பால் வினைமுற்று விகுதிகள் | து, று, டு |
| படர்க்கைப் பலவின்பால்வினைமுற்று விகுதிகள் | அ, ஆ |
| வியங்கோள் வினைமுற்று விகுதிகள் | க, இய, இயர் |
| தெரிநிலைப் பெயரெச்ச விகுதிகள் | அ, உம் |
| தெரிநிலை வினையெச்ச விகுதிகள் | உ, இ |

## இலக்கணத் தேர்ச்சி கொள்

**1.** **பகுபத உறுப்புகள் எத்தனை? அவை யாவை?** காலாண்டுத் தேர்வு 2019

பகுபத உறுப்புகள் ஆறுவகைப்படும்.

அவை: பகுதி, விகுதி, இடைநிலை, சந்தி, சாரியை, விகாரம்.

**2.** **காலம் காட்டும் இடைநிலைகளை எடுத்துக்காட்டுடன் விளக்குக.**

**காலம் காட்டும் இடைநிலைகள்:**

பகுபதத்தில் பகுதிக்கும் விகுதிக்கும் இடையில் தோன்றும் உறுப்புக்கு இடைநிலை அல்லது காலம் காட்டும் இடைநிலை என்று பெயர்.

த், ட், ற், இன் – இறந்தகால இடைநிலைகள்.

கிறு, கின்று, ஆநின்று – நிகழ்கால இடைநிலைகள்

ப், வ் – எதிர்கால இடைநிலைகள்

ஆ, அல், இல் – எதிர்மறை இடைநிலைகள்

**எ.கா. :**

(i) எடுத்தான் – எடு + த் + த் + ஆன்

எடு – பகுதி

த் – சந்தி

த் – இறந்தகால இடைநிலை

ஆன் – ஆண்பால் வினைமுற்று விகுதி

பீடு பெற நில்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 3 வாழ்வியல்

# திருக்குறள்

செய்யுள்

## ஆசிரியர் குறிப்பு



| | |
|---|---|
| பெயர் | : திருவள்ளுவர் |
| பெற்றோர் | : ஆதி, பகவன் |
| மனைவி | : வாசுகி |
| ஊர் | : மயிலை |
| காலம் | : கி.மு. 31-ம் நூற்றாண்டு |
| சிறப்புப் பெயர்கள் | : தேவர், நாயனார், தெய்வப்புலவர், செந்நாப்போதர், பெருநாவலர், பொய்யில் புலவர், பொய்யாமொழிப் புலவர், மாதானுபங்கி, முதற்பாவலர். |

**பதினெண் கீழ்க் கணக்கு நூல்கள்:**

(i) சங்க இலக்கிய நூல்கள் எட்டுத்தொகையும் பத்துப்பாட்டும் பதினெண் மேற்கணக்கு நூல்களாகும்.

(ii) சங்க மருவிய காலத்தில் தோன்றிய பதினெட்டு நூல்களின் தொகுதிதான் பதினெண் கீழ்க்கணக்கு நூல்களாகும்.

(iii) "நாலடி நான்மணி நானாற்ப தைந்திணைமுப்
பால்கடுங் கோவை பழமொழி - மாமூலம்
இன்னிலை சொல் காஞ்சியுட னேலாதி யென்பவே
கைந்நிலைய வாங்கீழ்க் கணக்கு"

(iv) மூன்று பொருள்களையும் குறைந்த அடிகளில் (நான்கடிக்கு மிகாமல்) உரைப்பது கீழ்க்கணக்கு நூல்களின் இயல்பாகும்.

**நீதி நூல்கள்:**

பதினெட்டு நூல்களில் பதினொரு நூல்கள் நீதியைப் பற்றிக் கூறுகின்றன. அவையாவன:

| | | |
|---|---|---|
| 1. திருக்குறள் | 5. இன்னா நாற்பது | 9. பழமொழி |
| 2. நாலடியார் | 6. திரிகடுகம் | 10. முதுமொழிக்காஞ்சி |
| 3. நான்மணிக்கடிகை | 7. ஆசாரக் கோவை | 11. ஏலாதி |
| 4. இனியவை நாற்பது | 8. சிறுபஞ்ச மூலம் | |

**உலகப் பொதுமறை:**

(i) உலகப் பொதுமறை என்னும் ஒப்பற்ற சிறப்பினையுடையது திருக்குறளாகும்.

(ii) தனி மனிதனின் வாழ்வின் மேன்மையைக் குறிப்பது அறத்துப்பால்.

(iii) சமுதாய வாழ்வினைச் சுட்டிக் காட்டுவது பொருட்பால்.

(iv) அக வாழ்வின் மேன்மையைச் சிறப்பித்துக்காட்டுவது இன்பத்துப்பால்.

(v) சொல்லழகும் பொருளழகும் கருத்தழகும் மிக்க ஒப்பற்ற நூல் உலகப் பொதுமறையாம் திருக்குறளே.

**இந்நூல் மூன்று பிரிவுகளைக் கொண்டது அவை :**

1. **அறத்துப்பால்** : இயல்-4, 38 அதிகாரம், பாயிரவியல் - 04, இல்லறவியல் - 20, துறவறவியல் - 13, ஊழியல் -01.
2. **பொருட்பால்** : இயல் 3 - 70 அதிகாரம், அரசு இயல் -25, அமைச்சு இயல் - 32, ஒழிபியல் - 13,
3. **இன்பத்துப்பால்** : இயல் 2 - 25 அதிகாரம், களவியல்- 07, கற்பியல் -18.



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# தமிழகக் கல்வி வரலாறு



## தெரிந்து தெளிவோம் :

- **கல்வியின் சிறப்பு :**
  துணையாய் வருவது தூயநற் கல்வி - திருமந்திரம்
  கல்வி அழகே அழகு - நாலடியார்
  இளமையில் கல் - ஔவையார்

| | |
|---|---|
| கணக்காயர் | எழுத்தும் இலக்கியமும் உரிச்சொல்லும் (நிகண்டு) கணக்கும் கற்பிப்போர் |
| ஆசிரியர் | பிற்காலத்தில் ஐந்தாக விரிக்கப்பட்ட மூவகை இலக்கணத்தையும் அவற்றுக்கு எடுத்துக்காட்டான பேரிலக்கியங்களையும் கற்பிப்போர் |
| குரவர் | சமய நூலும் தத்துவ நூலும் கற்பிப்போர் |
| பள்ளிகள் | கலைகள், கல்வி போன்றவற்றைக் கற்பிக்கும் இடங்களாக விளங்கின. |
| மன்றம் | கற்ற வித்தைகளை அரங்கேற்றும் இடமாகத் திகழ்ந்தது |
| சான்றோர் அவை | செயல்களைச் சீர்தூக்கிப் பார்க்கும் அவையாக இருந்தது. |

- 'ரெவரெண்ட் பெல்' என்ற ஸ்காட்லாந்து பாதிரியார் தமிழகத் திண்ணைப் பள்ளிக் கல்வி முறையைக் கண்டு வியந்தார். இம்முறையில் அமைந்த ஒரு பள்ளியை ஸ்காட்லாந்தில் 'மெட்ராஸ் காலேஜ்' என்னும் பெயரில் நிறுவினார். அங்கு இக்கல்விமுறை மெட்ராஸ் சிஸ்டம், பெல் சிஸ்டம் மற்றும் மானிடரி சிஸ்டம் என்றும் அழைக்கப்பட்டது.

- **தமிழகத்தில் விடுதலைக்கு முன் கல்வி வளர்ச்சி :**

| ஆண்டு | நிகழ்வு |
|---|---|
| 1826 | சென்னை ஆளுநர் சர். தாமஸ் மன்றோ ஆணைக்கிணங்கப் பொதுக்கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1835 | சென்னை மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டது. இது இந்தியாவில் முதன் முதலில் தொடங்கப்பட்ட இரண்டு மருத்துவக் கல்லூரிகளுள் ஒன்று. |
| 1854 | பொதுக்கல்வித் துறை நிறுவப்பட்டு முதல் பொதுக்கல்வி இயக்குநர் (DPI) நியமிக்கப்பட்டார். |
| 1857 | சென்னைப் பல்கலைக்கழகம் தொடங்கப்பட்டது. |
| 1859 | 1794இல் தொடங்கப்பட்ட ஸ்கூல் ஆஃப் சர்வே என்ற நிறுவனம், 1859இல் கிண்டி பொறியியல் கல்லூரியாக வளர்ச்சி அடைந்தது. |
| 1910 | தமிழ்நாடு இடைநிலைக் கல்வி வாரியம் தொடங்கப்பட்டது. |
| 1911 | பள்ளியிறுதி வகுப்பு – மாநில அளவிலான பொதுத்தேர்வில் நடைமுறைக்கு வந்தது. |

- **ஹென்றி ஆடம்ஸ் :** ஆசிரியரால் சர்வ வல்லமையிலும் பாதிப்பினை ஏற்படுத்த இயலும். அவரால், ஏற்படப்போகும் நல்ல விளைவுகள் அவர்களாலேயே மதிப்பிட இயலாது.

## நம்மை அளப்போம்

**பலவுள் தெரிக.**

1. **ஏடு, சுவடி, பொத்தகம், பனுவல் முதலிய சொற்கள் தரும் பொருள் ................ என்பதாகும்.** அ.மா.வி 2018, மார்ச் 2020

அ) நூல் ஆ) ஓலை இ) எழுத்தாணி ஈ) தாள்

**விடை: அ) நூல்**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 4

கேடில் விழுச்செல்வம் - கல்வி

# பிள்ளைக்கூடம்

- இரா. மீனாட்சி கவிதைப்பேழை

| பாடல் | |
|---|---|
| சொந்தமொழி கற்பிக்கும்<br>இந்தப் பள்ளிக்கூடம்<br>மிகவும் பிடித்துப் போய்விட்டது.<br><br>இங்கே, ஐம்பதாண்டு வேம்பு<br>கோடையில் கொட்டும் பூக்களை<br>எண்ணச் சொல்கிறார்கள்.<br><br>வேலி ஓணான்<br>கருங்கல் தூணில் வந்து அமர்ந்து<br>தியானிக்கும் நேரத்தைக்<br>குறித்து வைக்கச் சொல்கிறார்கள்.<br><br>வெட்டவெளியில்<br>தட்டுக்கூடையில்<br>சர்க்கரைப்பண்டம் வைத்தவுடன்<br>எங்கிருந்தோ வந்து சேரும்<br>எறும்புகளின் வேகத்தை<br>அளக்கச் சொல்லுகிறார்கள்<br><br>மழைய பெய்ய ஆரம்பித்தால்<br>வட்டரங்க நடுமேடையில்<br>வீழ்ந்து வழியும் | துளிகளின் வடிவத்தை<br>ஓவியமாய்த் தீட்ட,<br>செம்மண்தாளும்<br>வண்ணக்குச்சிகளும் தருகிறார்கள். மேலும்<br><br>காலையில் மயிலுடன் நடக்க வேண்டுமாம்.<br>மாமரக் குயிலுடன் இசைக்க வேண்டுமாம்.<br>வண்ணத்துப்பூச்சியுடன் பறந்து<br>ஆடித்திரிய வேண்டுமாம்.<br><br>மாலையில் மரங்களின் முதுகினைச்<br>செல்லமாய் வருடிவிட வேண்டுமாம்.<br>குறுஞ்செடிகளுடன் உற்சாகமாய்ப்<br>பேச வேண்டுமாம்.<br><br>இந்தப் பள்ளியில்<br>சேர்ப்பார்களா<br>என்னைப் பெற்றவர்கள்?<br>தாய்மொழியிலே பயின்று<br>யாதும் ஊரென<br>உலகின் உறவாகவே<br>விரும்புகிறேன் நான். – இரா. மீனாட்சி |

**பொருளுரை :**

இளமையின் சிறகை முறிக்காத இனிய சூழலில், பிள்ளைகளுக்குப் பிடித்த பள்ளிக்கூடம் எவ்வாறு இருக்க வேண்டும் என்றொரு கனவு அனைவருக்கும் இருக்கும். அந்தக்கனவை ஓர் ஓவியர் வரைந்து காட்டலாம். ஒரு பாடகர் பாடிக் காட்டலாம். இங்கோர் கவிஞர் எழுதிக் காட்டுகிறார். சொந்த மொழி கற்பிக்கும் இந்தப் பள்ளிக்கூடம் மிகவும் பிடித்தும் போய்விட்டது.

இப்பள்ளியில், ஐம்பதாண்டு வேம்பு கோடையில் கொட்டும் பூக்களை எண்ணச் சொல்கிறார்கள். வேம்பின் பூக்கள் அளவில் சிறியது. அதன் எண்ணிக்கையை எண்ணச் சொல்லும் அழகு இயற்கையோடு இணைந்து செயல்படும் செயல்பாட்டை உணரச் செய்கிறார்கள்.

வேலி ஓணான் கருங்கல் தூணில் வந்து அமர்வது இயல்பு. அது ஆடாமல் அசையாமல் இருப்பது தவம் செய்வது போல இருக்கின்றதாம். அந்த தவத்தின் நேரத்தை குறித்து வைக்கச் சொல்கிறார்கள். வெட்ட வெளியில் தட்டுக் கூடையில் சர்க்கரைப் பண்டம் வைத்தவுடன் எங்கிருந்தோ வரும் எறும்புகளின் வேகத்தை அளக்கச் சொல்கிறார்கள். எறும்புவின் சுறுசுறுப்பு அங்கே சுட்டிக் காட்டப்படுகின்றன.

மழை பெய்யும் நேரத்தில் வட்டரங்க நடுமேடையில் விழுந்து வழியும் மழைத்துளிகளின் வடிவத்தை அழகோவியமாகத் தீட்ட செம்மண் தாளும் வண்ணக்குச்சிகளும் தருகிறார்கள். காலையில் மயிலுடன் நடக்க வேண்டுமாம்; மாமரக் குயிலுடன் இசைக்க வேண்டுமாம், வண்ணத்துப் பூச்சியுடன் பறந்து ஆடித்திரிய வேண்டுமாம். மாலை நேரத்தில் மரங்களின் முதுகினைச் செல்லமாய் வருடிவிட வேண்டுமாம். குறுஞ்செடிகளுடன்



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**முடிவுரை :**

'தாய்மொழியிலே பயின்று
யாதும் ஊரென
உலகின் உறவாகவே
விரும்புகிறேன் நான்' என்கிறார் கவிஞர்.

☆☆☆

இயல் 4 கேடில் விழுச்செல்வம் - கல்வி

# நற்றிணை

- போதனார் கவிதைப்பேழை

**பாடல்**

**பிரசம் கலந்த வெண்சுவைத் தீம்பால்**
**விரிகதிர்ப் பொற்கலத்து ஒருகை ஏந்திப்**
**புடைப்பின் சுற்றும் பூந்தலைச் சிறுகோல்**
**உண்என்று ஒக்குபு புடைப்பத் தெண்ணீர்**
**முத்தரிப் பொற்சிலம்பு ஒலிப்பத் தத்தற்று**
**அரிநரைக் கூந்தற் செம்முது செவிலியர்**
**பரீஇ மெலிந்துஒழியப் பந்தர் ஓடி**
**ஏவல் மறுக்கும் சிறுவிளை யாட்டி**
**அறிவும் ஒழுக்கமும் யாண்டுணர்ந்தனள் கொல்**
**கொண்ட கொழுநன் குடிவறன் உற்றெனக்**
**கொடுத்த தந்தை கொழுஞ்சோறு உள்ளாள்**
**ஒழுநீர் நுணங்கறல் போலப்**
**பொழுது மறுத்து உண்ணும் சிறு மதுகையளே.** (110) **– போதனார்**

**பொருளுரை :**

"நம் வீட்டில் தேன் கலந்த இனிய பால் உணவை ஒளிமிக்க பொற்கலத்தில் இட்டுச் செவிலித்தாயார் ஒரு கையில் ஏந்தி வருவர். நம் மகளை உண்ண வைப்பதற்காக இன்னொரு கையில் பூச்சுற்றிய மென்மையான சிறு கோலை வைத்திருப்பர். வீட்டின் முற்றத்தில் பந்தலின் கீழ் 'இதை உண்பாயாக' எனச் செல்லமாக அக்கோலால் அடித்து வேண்டுவர். மகளோ, 'நான் உண்ணேன்' என மறுத்து முத்துப்பரல்கள் இட்ட பொற்சிலம்பு ஒலிக்க அங்குமிங்கும் ஓடுவாள்.

செவிலித்தாயார் அவளைப் பின் தொடர முடியாமல் நடை தளர்ந்து நிற்பார். இப்படிப்பட்ட விளையாட்டுப் பெண், நம் மகள், இவள் எப்படி இப்போது இத்தகைய அறிவையும் இல்லற நடைமுறையும் கற்றாள்? தான் மணந்து கொண்ட கணவன் வீட்டில் வறுமையுற்ற நிலையிலும் தன் தந்தையின் வீட்டில் பெற்ற வளமான உணவினைப் பற்றி நினைத்துப் பாராள். ஓடுகின்ற நீரிலே கிடக்கும் நுண்மணலில் இடைவெளி இருப்பதுபோல் ஒரு பொழுது இடைவெளி விட்டு ஒரு பொழுது உண்ணும் வன்மை பெற்றிருக்கிறாள். இது என்ன வியப்பு?"

**திணை** : பாலை

**துறை** : மகள் நிலை உரைத்தல்

**கூற்று** : தலைவி இல்லறம் ஆற்றும் செவ்வியைப் பாராட்டிச் செவிலித்தாய் நற்றாயிடம் கூறியது.

**கூற்று விளக்கம்** : திருமணம் முடிந்து கணவன் வீட்டில் வசிக்கும் தலைவியைக் காணச் சென்று வந்த செவிலி, நற்றாயிடம் மகள் வறுமையிலும் செம்மையாக வாழ்வதைச் சொல்லி, இத்தகைய இல்லற அறிவை எப்படிப் பெற்றாள் என வியந்து கூறுதல்.

**துரை விளக்கம்** : "மகள் நிலை உரைத்தல்" என்பது தலைவனோடு உடன்போகிய விளையாட்டுப் பருவம் மாறாத மகள் இல்லறம் ஆற்றும் பாங்கை நற்றாயிடம் செவிலித்தாய் எண்ணிக் கூறுவது. இத்துறை **"மனை மருட்சி"** என்றும் கூறப்படும்.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 4

கேடில் விழுச்செல்வம் - கல்வி

# தொல்காப்பியம்

சிறப்புப் பாயிர உரைவிளக்கப் பாடல் - தொல்காப்பியர்

கவிதைப்பேழை

பாடல்

வழக்கின் இலக்கணம் இழுக்கின்று அறிதல்
பாடம் போற்றல் கேட்டவை நினைத்தல்
ஆசாற் சார்ந்துஅவை அமைவரக் கேட்டல்
அம்மாண் புடையோர் தம்மொடு பயிறல்
வினாதல் வினாயவை விடுத்தல் என்றின்னவை
கடனாக் கொளினே மடம்நனி இகக்கும். 1

ஒருகுறி கேட்போன் இருகாற் கேட்பிற்
பெருக நூலிற் பிழைபா டிலனே. 2

முக்காற் கேட்பின் முறையறிந்து உரைக்கும். 3

**பொருளுரை :**

சிறப்புடைய மாணவர் எனப்படுவோர் உலக வழக்கு, நூல் வழக்கு ஆகிய இலக்கணங்களை ஆசிரியர்களிடம் குற்றமின்றி அறிவர். பாடங்களைப் போற்றிக் கற்பர். ஆசிரியர்களிடம் கற்ற பாடங்களை மீண்டும் நினைத்துப் பயிற்சி பெறுவர். ஆசிரியரை அணுகிப் பாடக்கருத்துகளைக் கேட்டுத் தெளிவு அடைவர். ஆசிரியர்களைப் போன்ற உயர்சிந்தனை உடையவர்களுடன் கலந்துரையாடி விளக்கம் பெறுவர். தங்களது ஐயங்களை ஆசிரியர்களிடம் வினவித் தெளிவுறுவர். அவ்வாறு தெளிவுற்ற கருத்துகளைப் பிறர்க்கு உணர்த்தித் தெளிவடையச் செய்வர். ஆசிரியர் கூறும் கருத்துகளை ஒரு முறைக்கு இருமுறை கேட்டும் மாணவர்கள் நூலைப் பிழையின்றிக் கற்கும் திறன் பெறுவர். மூன்றுமுறை கேட்போர் பாடக்கருத்துகளைப் பிறர்க்கு முறையாக எடுத்துரைக்கும் ஆற்றல் பெறுவர். இத்தன்மையில் பாடம் கேட்டலைக் கடமையாகக் கொண்ட மாணவர்கள் அறியாமையிலிருந்து நீங்கிச் சிறந்து விளங்குவர்.

**சொல்லும் பொருளும் :**

1. இகக்கும் – நீக்கும்
2. இழுக்கு – குற்றம்
3. வினாயவை – கேட்டவை

**தொல்காப்பியம்:**

- தொல்காப்பியரால் தொகுத்தும் பகுத்தும் சேர்த்தும் எழுதப்பட்ட நூல் தொல்காப்பியமாகும்.
- இந்நூல் எழுத்து, சொல் மட்டுமன்றிப் பொருள் இலக்கணமான வாழ்வின் இலக்கணத்தையும் வகுத்துக் கூறுவதாகும்.
- நாட்டின் எதிர்காலமாய் விளங்கும் மாண்பு பொருந்திய மாணவர் எவ்வாறு கற்க வேண்டும் என்பதை இதன் சிறப்புப் பாயிர உரை விளக்கப் பாடல் தெள்ளிதின் விளக்குகிறது.

**நூற்குறிப்பு :**

- நமக்குக் கிடைக்கும் தமிழ் நூல்களில் காலத்தால் பழமையான **இலக்கண நூல்** தொல்காப்பியம்.
- தொல்காப்பியம் **எழுத்து, சொல், பொருள்** என மூன்று அதிகாரங்களைக் கொண்டது. ஒவ்வொரு அதிகாரத்திலும் **ஒன்பது** இயல்களாக மொத்தம் இருபத்தேழு இயல்கள் உள்ளன.
- தொல்காப்பியத்திற்குப் பலர் உரை எழுதியுள்ளனர். அவர்களுள் பழமையான உரையாசிரியர்கள் **இளம்பூரணர், நாச்சினார்கினியார், கல்லாடனார், சேனா வரையர், தெய்வச்சிலையார் பேராசிரியர்** ஆகியோர் ஆவர். நச்சினார்க்கினியரின் சிறப்புப் பாயிர உரைவிளக்கத்தில் உள்ள பாடல் பாடமாக இடம் பெற்றுள்ளது.

**ஆசிரியர் குறிப்பு :**

- இதன் ஆசிரியர் தொல்காப்பியர்.
- இவர் கன்னியாக்குமரி மாவட்டத்தைச் சேர்ந்தவராவார்.
- இவர் வாழ்ந்த காலம் இன்றளவும் தெளிவானதாக இல்லை.





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



**பெண்மை அறிவுயரப் பீடோங்கும் பெண்மைதான்**
**ஒண்மை யுறஓங்கும் உலகு.**

எடுத்துக்கொண்ட ஒவ்வொரு செயலிலும் தமது கொள்கையையும் உணர்வையும் வெளிப்படுத்தும் பண்பைப் பாரதியிடமிருந்து இளைய சமுதாயம் கற்றுக்கொள்ள வேண்டும்.

(viii) **சிவப்பு வண்ணம் :** சிவப்பு வண்ணம் புரட்சியையும் விடுதலையையும் குறிப்பது என்பதால் அடிமைத்தளையில் இருந்து இந்தியாவை விடுவிக்க வேண்டும் என்ற எண்ணம் பாரதியின் இந்தியா இதழின் வண்ணத்திலும் வெளிப்பட்டது.

(ix) பாரதி தம்மைப் போலவே பிறரையும் நேசிக்கும் பண்பாளர். அதனால்தான் தனக்கு மட்டுமல்ல தன் நண்பர்களுக்கும் ஆங்கிலேயர்களால் எந்தக் கெடுபிடியும் வந்துவிடக்கூடாது என்பதற்காக நண்பர்களின் பெயர்களையும் அவர்கள் கூடிப்பேசும் இடங்களையும் புனைபெயரில் பயன்படுத்தி வந்துள்ளார். மற்றவர் பெயரை வெளிப்படுத்த விரும்பாத பாரதியின் இதழியல் அறத்தையும் இப்புனை பெயர்களில் காணலாம்.

**முடிவுரை :** பாரதியின் கடிதங்களும், கருத்துப்படத் தொகுப்பும், இவர் நடத்திய இந்த இதழ்கள் எல்லாம் சிறப்பாகத் தொகுக்கப்பட்டு இன்றைக்கு நூலாக்கம் பெற்றுள்ளன. இவையெல்லாம் தமிழினத்தின் பேறு ஆகும்.

## கூடுதல் வினா

**பலவுள் தெரிக.**

1. **தமிழ் இதழியல் துறையில் முதன்முதலாக கருத்துப் படங்களை கொண்ட இதழ்களை அறிமுகப்படுத்தியவர்**

அ) பி.பி. சுப்பையா ஆ) கனகலிங்கம்
இ) என்.நாகசாமி ஈ) பாரதியார்

**விடை: ஈ) பாரதியார்**

☆☆☆

**கேடில் விழுச்செல்வம் – கல்வி**

# இயல் 4 படைப்பாக்க உத்திகள்

**இனிக்கும் இலக்கணம்**

## இலக்கணத் தேர்ச்சி கொள்

1. **உவமை எவ்வெவற்றின் அடிப்படையில் தோன்றும்?** (காலாண்டுத் தேர்வு 2018,19)

உவமை வினை, பயன், வடிவம், உரு என்ற நான்கின் அடிப்படையில் தோன்றும்.

2. **உவமைத்தொடர்களால் அழைக்கப்பெறும் சங்கப்புலவர்கள் பெயர்களைத் தொகுத்து அவற்றில் உள்ள உவமைகளைக் கண்டறிக.**

**உவமைத்தொடர்களால் அழைக்கப் பெறும் சங்கப் புலவர்கள் பெயர்கள் :**

செம்புலப் பெயல்நீரார், தேய்புரிபழங்கயிற்றினார், அணிலாடு முன்றிலார், ஊட்டியார், ஓரேர் உழவனார், குப்பைக் கோழியார்.

3. **ஒட்டுப் போடாத**
**ஆகாயம் போல – இந்த**
**உலகமும் ஒன்றேதான்... – இக்கவிதையில் பயின்று வருவது** (அ.மா.வி 2018)

அ) உவமை ஆ) உருவகம் இ) உள்ளுறை ஈ) இறைச்சி

**விடை: அ) உவமை**





orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



# ஆனந்தரங்கர் நாட்குறிப்பு



**தெரிந்து தெளிவோம் :**

- உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் தந்தை என அழைக்கப்படுபவர் **சாமுவேல் பெப்பிசு** ஆவார். ஆங்கிலேயக் கடற்படையில் பணியாற்றிய அவர் 'இரண்டாம் சார்லஸ்' மன்னர் காலத்து நிகழ்வுகளை **(1660 – 1669)** நாட்குறிப்பாகப் பதிவு செய்துள்ளார். இவரைப் போலவே ஆனந்தரங்கரும் **06.09.1736** முதல் **11.01.1761** வரை நாட்குறிப்பு எழுதியுள்ளார். இந்நாட்குறிப்பு இந்தியாவின் முதன்மையான நாட்குறிப்பாகும். இதனால், ஆனந்தரங்கர் **இந்தியாவின் பெப்பிசு** என்று அழைக்கப்படுகிறார்.
- **ஆனந்தரங்கரைப் பற்றி வ.வே.சு கூற்று :** அந்தக் காலத்தில் நடந்த செய்திகளையெல்லாம் முக்கியமானது. முக்கியமில்லாதது என்றுகூடக் கவனிக்காமல், ஒன்று தவறாமல் சித்திரகுப்தன் எழுதி வரும் பதிவைப் போல நல்ல பாஷையில் அன்றாடம் விஸ்தாரமாக எழுதி வைத்திருக்கிறார் ஆனந்தரங்கர்.
- **ஆனந்தரங்கர் நாட்குறிப்புக் குறித்து உ.வே.சா :** தமிழ்த்தாய் நெருப்பினாலும் வெள்ளத்தினாலும் பாதிக்கப்பட்டாலும் அவளது ஆபரணங்கள் தொலைவில் உள்ள நகரமான பாரீசில் மிகவும் பாதுகாக்கப்பட்டுப் பராமரிக்கப்படுகின்றன.
- **ஆனந்தரங்கர் காலத்தில் வழக்கில் இருந்த நாணயங்கள் :**

| | |
|---|---|
| 480 காசு | ஒரு ரூபாய் |
| 60 காசு | 1 பணம் |
| 8 பணம் | 1 ரூபாய் |
| 24 பணம் | ஒரு வராகன் |
| 1 பொன் | ½ வராகன் |
| 1 வராகன் | 3 அல்லது 3.2 ரூபாய் |
| 1 மோகரி | 14 ரூபாய் மதிப்புள்ள தங்க நாணயம் |
| 1 சக்கரம் | ½ வராகனுக்கும் கூடுதல் மதிப்புள்ள தங்கநாணயம் |

- **ஆனந்தரங்கர் பற்றிய நூல்கள் சில :**
  1. ஆனந்தரங்கன் கோவை – தியாகராய தேசிகர்
  2. ஆனந்தரங்கன் பிள்ளைத்தமிழ் – புலவரேறு அரிமதி தென்னகன்
  3. வானம் வசப்படும் – பிரபஞ்சன்.
- புதுச்சேரியின் ஆளுநராக லெறி இருந்த காலத்தில், புதுச்சேரியின் இராணுவ அரசியல் செய்திகளை முகலாயருக்கும், ஆங்கிலேயருக்கும் கூறுவதாக ஆனந்தரங்கர் மீது பழி சுமத்தப்பட்டது. அப்போது ஆளுநரிடம், ஆனந்தரங்கர், "இப்பட்டணத்தில் உம்முடைய அதிகாரம்தான் இறுதியானது. அநீதியாகவும் உண்மைக்கு மாறாகவும் நடக்க நீர் விரும்பினால் உம்மைத் தடுக்கும் அதிகாரம் ஒருவருக்கும் இல்லை. ஆகவே, என்னைக் காவலில் போட விரும்பினால் உடனே செய்யலாம். பிற தண்டனையும் வழங்கலாம். இரண்டு சல்லிகூட நான் செலுத்த மாட்டேன். சிறையில் அடைத்துவிடுவீர் எனப் பயந்து ஒரு வாரத்தில் பணம் தருவேன் என்று நீர் கருத வேண்டாம்.

**(தொகுதி 11 பக்க. 81–84)**



orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

This is Only for Sample
for Full Book Order Online and Available at All Leading Bookstores



இயல் 5 நாளெல்லாம் வினைசெய் - நாகரிகம், தொழில், வணிகம்

# சீறாப்புராணம்

- உமறுப்புலவர் கவிதைப்பேழை

**ஹிஜிறத்துக்காண்டம் - மதீனம்புக்க படலம் :**

ஹிஜிறத் என்ற அரபுச் சொல்லுக்கும் **இடம் பெயர்தல்** என்பது பொருள். மக்கா நகரத்தின் குறைசி இன மக்கள். நபிகள் நாயகத்திற்குக் கொடுமைகள் பல செய்தனர். நபிகள் நாயகம் மக்காவை விட்டு மதீனாவிற்கு வரவேண்டுமென்று மதீனா மக்கள் அழைத்தனர். அந்த அழைப்பை நபிகள் நாயகம் ஏற்றார். இசுலாமிய அறநெறிகளை வளர்க்க மக்காவை விட்டு மதீனா நகரத்திற்குத் தம் துணைவரான அபூபக்கர் முதலானோருடன், முல்லை நிலத்தையும் குறிஞ்சி நிலத்தையும் கடந்து மதீனா நகரத்தில் நுழைந்தார். அந்நகரினைக் காப்பிய இலக்கண நெறி நின்று **உமறுப்புலவர்** புகழ்ந்து பாடியுள்ளார்.

பாடல்

**மாளிகை நகரம்**

**வடவரை பொருவென மலிந்த மேனிலைக்**
**கடலென ஒலித்ததா வணத்தின் கம்பலைப்**
**புடவியை அளந்தன போன்று வீதிகள்**
**இடனற நெருங்கின மாடம் எங்குமே**

**பொருளுரை :**

மேருமலையினைப் போன்று மதீனா நகரின் மேன் மாடங்கள் உயர்ந்திருந்தன. அங்காடிகள் நிறைந்த தெருக்களில் எழுந்த ஒலி, பெருங்கடலொலி போன்று இருந்தது. மதீனா நகரின் வீதிகள் பேரண்டத்தைப் போன்று பரந்திருந்தன, அந்நகரில் சிறிதும் இடைவெளியின்றி மாளிகைகள் நெருக்கமாக அமைந்திருந்தன.

பாடல்

**கொடை நகரம்**

**கலைவலார் மறையவர் கருத்தில் எண்ணிய(து)**
**இலையெனா(து) அரும்பொருள் யாவும் எய்தலால்**
**மலைவிலா(து) அருளிய வள்ளி யோரினும்**
**தொலைவிலாப் பெரும்புகழ் படைத்த தொன்னகர்**

**பொருளுரை :**

பழைமையான மதீனா நகரம், கலைஞர்களும் மறையவர்களும் நினைக்கின்ற பொருள் வளத்தைக் கொண்டது. அங்கு எந்தப் பொருளும் இல்லையன்று சொல்வதற்கு இல்லை. அப்படிக் கேட்போர்க்கும் அப்பொருளை எல்லாம் வாரிவழங்கும் வள்ளன்மை கொண்டவர்கள் உண்டு. அவ்வள்ளல்களை விடக் குறையாத பெரும் புகழைப்பெற்றது மதீனா நகரம்.

பாடல்

**பொன்னகரம்**

**தோரணத் தொடும் கொடிக்காடு துன்னலால்**
**வாரண மதமலை மலிந்து நிற்றலால்**
**காரணத் தொடும்வர வாறு காணலால்**
**பூரணப் புவியெனப் பொலிந்த பொன்னகர்**

**பொருளுரை :**

கட்டப்பட்ட தோரணங்களும் கொடிகளும் காடு போல நெருங்கியிருந்தன. மலை போன்ற யானைகள அவ்விடத்தில் நிறைந்திருக்கின்றன. வழிகள் யாவும் ஒழுங்குடன் காணப்பட்டன. இவற்றால் முழுமை பெற்ற பூமியைப் போல மதீனா நகரம் பொன்னெனப் பொலிந்தது.

பாடல்

**மனைநகரம்**

**சுதையொளி மேனிலை துலங்கித் தோன்றலால்**
**புதுமலர்த் தெருத்தொறும் சிந்திப் பொங்கலால்**
**எதிர்பணிந்(து) இடுவிருந்து இனிதின் நல்கலால்**
**வதுவையின் மனையென இருந்த மாநகர்.**


orders@surabooks.com Ph: 9600175757 / 8124201000

www.surabooks.com